ஒளி : 04 கதிர் : 04 2025 ஒக் -டிசம்பர்

# அவரி 16

கலை இலக்கிய முத்திங்கள் இதழ்



350/=

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு


ஒளி : 04
கதிர் : 01
2025 - ஜனவரி - மார்ச்
SRI LANKA PEN CLUB
அவரி 13
கலை இலக்கிய முத்திங்கள் இதழ்
350/=
ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு


ஒளி : 04
கதிர் : 02
2025 - ஏப்ரல் -ஜூன்
SRI LANKA PEN CLUB
அவரி 14
கலை இலக்கிய முத்திங்கள் இதழ்
350/=
ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு


ஒளி : 04
கதிர் : 03
2025 ஜூலை -செப்டம்பர்
SRI LANKA PEN CLUB
அவரி 15
கலை இலக்கிய முத்திங்கள் இதழ்
350/=
ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு


ஒளி : 04
கதிர் : 04
2025 ஒக் -டிசம்பர்
SRI LANKA PEN CLUB
அவரி 16
கலை இலக்கிய முத்திங்கள் இதழ்
350/=
ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு

# அவிர் 16

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான SRI LANKA PEN CLUB
முத்திங்கள் வெளியீடு

**ஒளி : 04 கதிர் : 04 2025 – ஒக்டோபர் – டிசம்பர்**

அவரி ஆசிரியர் குழு.

நிர்வாக ஆசிரியர்
சம்மாந்துறை மஷூறா **JP**

இதழாசிரியர்
சித்தி ஜெஸீனா நிஸ்றீன்.
சாய்ந்தமருது.

## சஞ்சிகை செயற்குழு

ஷாமென் நிஸாம்டீன்.
கட்டுகஸ்தோட்டை.

வ.்.பீரா வ.்.பீ.
கொழும்பு.

சுஸானா முனாஸ்.
மூதூர்.

அஸ்மா தீன்.
கம்பளை.

மஹீஸா பானு ஜெஸூர்.
சம்மாந்துறை.

மர்ளியா சக்காப்.
திருகோணமலை.

ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி.

பாரா தாஹிர்.
மாவனெல்லை.

மிஸ்ரியா அமீன்.
கிண்ணியா.

றம்ஸானா ஸமீல்.
அக்கரைப்பற்று.

நௌஷா ஜமால்தீன்.
சம்மாந்துறை.

பானு ஜிப்ரி.
சாய்ந்தமருது.

எம்.ஆர்.ரபீஉல் பஸ்ரானா
நேகம

நிர்வாக அலுவலகம்
மஷூறா மஹால் 4/C/5/லேக் வீதி, மருதமுனை 04 (32314)
**0765363434 / 0770696559 / 0672261044**
**ISSN: 2961-5194**

## தூரநோக்கு

கலாசாரத்தினூடாக கலையிலக்கியங்களைக் கட்டியெழுப்புவதும் ஆற்றலுள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்

## நோக்கக் கூற்று

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் களங்கள் அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்

# SRI LANKA PEN CLUB கீதம்

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்
Sri Lanka Pen Club ///

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா....
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி.....

கலைகளும் செய்வோம் சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு....
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம்.....

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை....
கலாசார மீறல்களற்ற தோருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம்.....

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில்....
சிதைந்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம்....!!!

- பாடலாக்கம்:- சம்மாந்துறை மஷூறா

# நிர்வாக ஆசிரியரின் செய்தி.

**இலக்கிய வித்தகர் – சம்மாந்துறை மஷூறா JP**



அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

நான்காவது வருடத்தின் பதி னாறாவது இதழில் சந்திப்பதையிட்டு பேருவகையடைகிறேன். 2023 ல் அவரி கிழக்கு மாகாண சாஹித்திய விரு தினை வென்று சாதனை படைத்திருந் தது.இது எமது ஆற்றலுள்ள பெண்க ளின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியா கும்.

எமது **SRI LANKA PEN CLUB** அமைப்பிற்கும் சரி அவரி சஞ்சிகைக் கும் சரி எந்த சாரதிகளும் இல்லை. ஆலோசகர்களும் இல்லையென்பதை வலியுறுத்தி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாரதிகளும் நாங்களே. ஓட்டுனர்களும் நாங்களே. இன்றைய பெண்கள் சிறந்த கல்வியினைப் பெற் றிருக்கிறார்கள் அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்கள். எங்களை நாங் கள் வழிநடத்திக் கொள்ள இது போது மானது.

அங்கத்தவர்களை இடைய றாத செயற்பாடு உடையவர்களாக நிலைமாற்றம் செய்திருக்கிறோம். **SLPC** யும் சரி அவரியும் சரி நிலை மாற்று முகவராய் தொழிற்படுவதில் சரியான அடைவைப் பெற்றிருக்கிறது. தவிர ஒவ்வொரு அங்கத்தவர்களின் ஆற்றல்களையும் மேம்படுத்துவதிலும் கரிசனை செலுத்தி வருகிறோம். அதா வது அவர்களது "இயலுமான தன் மையை வெளிக் கொண்டு வருதல்."

அவர்களுக்கே தெரியாத அவர்க ளது ஆற்றல்களை அவர்களுக்கு புரிய வைத்திருக்கிறோம்.

வாட்சப் குறூபில் வாரம் நான்கு நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சி கள் இதற்கான அத்திவாரமாகும். "நூலகம்" நிகழ்ச்சி மூலம் சிறந்த வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி சிறந்த விமர்சகர்கள் உரு வாக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு எத்தனையோ அடைவுகள். முன்னரெப் போதையும் விட எம்மவர்களின் படைப் புகள் பல தினசரிகளிலும் சஞ்சிகைக ளிலுமாக சரமாரியாக வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவற்றைப் பகிர்ந்து மகிழ்ச்சியடையவும் பாராட் டுப் பெறவுமாக மாதமொரு முறை "கண்டதும் கேட்டதும்" என்றொரு நிகழ்ச்சியை செய்கிறோம். இந்நிகழ்ச் சியில் வந்து குவியும் ஆக்கங்களை காணும்போது "ஈன்ற பொழுதிற் பெரிது வக்கும்" தாயின் மனநிலையில் பேருவ கையடைகிறேன். என்றும் எங்களுக்கு அனுசரணையாக இருக்கும் ஆண்க ளையும் நினைவு கூருகிறேன். கலாசார உத்தியோகத்தர்களாக போஷகர்க ளாக சிரேஷ்ட எழுத்தாளர்களாக உற வினர்களாக அங்கத்தவர்களின் தந் தைகளாக கணவர்களாக எம்மோடு

இயைந்து போகும் இவர்களையிட்டு பெருமிதமடைகிறேன்.

இந்த சஞ்சிகையின் ஆசிரியர் சாய்ந்தமருது சித்தி ஜெஸீனா நிஸ்றீன் மர்ஹூம் கவிஞர் ஏ யூ எம் ஏ கரீம் அவர்களின் கனிஷ்ட புதல்வி. இவரது கணவர் நிஸ்றீன் (ஓய்வு பெற்ற கிராம சேவகர்.) அவர்களும் ஒரு எழுத்தாளர். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடுமே. எனவே ஜெஸீனா பற்றி அறிமுகம் அதிகம் தேவையில்லை. ஜெஸீனா முன்னாள் வானொலிக் கலைஞரும்கூட. இனி அவரியைப்புரட்டி அவரைப் படிக்கலாம்.

மீண்டும் சந்திப்போம்.
அன்புடன் நிர்வாக ஆசிரியர்

# அவரி ஆசிரியர் செய்தி.



**ஹாஜியானி – சித்தி ஜெஸீனா நிஸ்றீன்**

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத் துல்லாஹி வபரக்காத்துஹு

அவரி 16 இன் சஞ்சிகை ஆசிரியராக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாடளாவிய ரீதியிலான முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைக் கொண்டது தான் எமது ஸ்ரீலங்கா பென் கிளப் அமைப்பு பெண் எழுத்தாளர்களின் எழுத்தாளுமையை ஊக்குவிக்கும் வகையிலும் மென்மேலும் வளரச் செய்யும் நோக்கத்தோடும் உருவாக்கப்பட்டது.

இந்த அவரி சஞ்சிகை இலக்கியத்தின் மூலம் சமூகத்திற்கு பிரயோசனமான விடயங்களை முன்வைக்க வேண்டும் என்பதே எனது அவா.

அந்த வகையில் இந்த அவரி சஞ்சிகையானது பல்வேறு வகையான தகவல்களை தாங்கியதாக வெளிவந்திருப்பது சிறப்பாக உள்ளதாக கருதுகிறேன். மேலும் எமது நிர்வாக ஆசிரியரான மஷூறா சுஹறுதீன் அவர்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமானது எனலாம்.

ஒரு பெண்ணைச் சுற்றிலும் பல்வேறுபட்ட பொறுப்புக்கள் உள்ளன குடும்பத்தையும் தாண்டி அவள் ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடும் பொழுது எல்லா விடயங்களையும் சமநிலையாக கையாள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறாள். இதுவரை அவரியின் ஆசிரியர்களாக செயற்பட்ட இதழ் ஆசிரியர்களின் முன்மாதிரியை பாராட்டுகிறேன்.

அவ்வகையில் எனக்கு வழிகாட்டிய எங்கள் அமைப்பின் தலைவி அவர்களுக்கும் ஆக்கங்களை அனுப்பி வைத்த சகோதரிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் அன்புடன்
அவரி ஆசிரியர்

# அவரி 16 உள்ளடக்கம்.......


பெண்ணின் பெருமை .- கவிதை.
கலாபூஷணம் மும்தாஜ் பேகம் ஹமீட்.

ஊமையின் ஒலிக்கு உயிரில்லை - கவிதை
கலாபூஷணம் இராணி பௌசியா.

**Google Meet** - நவீன தொடர்பாடல் பரிணாமம்.
ஹகீமா அமீனுதீன்.

பொய்த்துப் போகும் நீதி - சிறுகதை
சுஸானா முனாஸ்.

மரணப் பிரார்த்தனை - கவிதை
பானு ஜிப்ரி.

புன்னகை மறந்த பூக்கள் - கவிதை
ஐனுன் கதிஜா அன்சார்.

மண் இன்றிய பயிர்ச் செய்கை - கட்டுரை.
எம்.எச். முர்ஷிதா ஷிரீன்.

சூரியனால் ஒளிரும் நிலவுகள் - சிறுகதை.
சம்மாந்துறை மஷூறா.

மொழிபெயர்ப்புக் கவிதை
கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ.

ஹைக்கூ கவிதைகள்
ஸெய்னுலாப்தீன் நஸீரா.

அலசல் - சமூகச் சித்திரம்
ஜெஸ்மின் றமீஸ்.

கிழிந்த கோப்பு - சிறுகதை
நுஸ்ரா லியாகத் அலீ.

வேதனைப் பெருவெளி - கவிதை
நஸ்றீனா பதூர்தீன்.

இரவு - கவிதை
அகீலா ஜவ்பர்.

நேர்காணல்
ஷாமென் நிஸாம்டீன்.

முபீதாவின் ஓவியங்கள்

கோள் மூட்டுதல் - கடடுரை
ஷியாஸ்னா பைஸல்.

ஏழை முகம் - கவிதை
எஸ்.எம்.பெனாஸிரா.

நூல் விமர்சனம்
மிஸ்ரியா அமீன்.

படித்ததில் பிடித்தது
ஜெஸீமா முஜீப்.

## பெண்ணின் பெருமை.

விண் மீனைப் போல்
விழிகளிலும் கனவு.
வெற்றிக்கென எழுதும்
விழிகளின் அணிவகுப்பு
அவள் ஒரு குடும்பம் மட்டுமல்ல.
ஒரு சமூகம் உருவாகும் விதை.

மெல்லிய குரலுக்குள்
மறைந்திருக்கும் முழங்கும்
விழிப்புணர்ச்சி.
மௌனமாகத் தோன்றும் அவள் நடை
பசுமைப் பூமியின் அடையாளம்.

சோறு விடாமல் வைக்கும் கைதான்
பசித்த பிள்ளையின்
தாயான கதைதான்.
மண்ணை உழக்கும் அவள் நெஞ்சம்
மக்களுக்கு உருவான தெய்வம்.

வலிதான் அவள்
ஆடையைத் தைத்த நூல்
மௌனத்தைத் துணியாகக் கட்டிய
போராளி
அவளை இகழ்ந்தது வரலாறு.
ஆனால் வருங்காலம்
அவளைப்பாடும் காவியம்

பெண் என்பது மாறும் முகமல்ல.
மாறாத மரியாதையின் உருவம்.
அவள் வேண்டியதில்லை பெருமை.
அவளேதான் பெருமையின்
பிறவியாகிறாள்.

கலாபூஷணம்
மும்தாஜ் பேகம் ஹமீட்
ஒலுவில்



## விதவை.

தியாகத்தின் திருவுரு அவள்
மனை ஆளும் மாதரசி அவள்

சூறைக்காற்றாய் சுழன்றடித்ததில்
சின்னவள் வாழ்வின் மாற்றம்

சிறப்பாய் சமூகம்
சூடிய நாமமே
வாளா வெட்டி
விதவையென்றும்

புன்னகையும்
பூமுகமும்
திண்ணமாய் மறைய
புண்ணாக வலி கொடுத்தது
மாறா நாமமது

வாழுமிப்பருவத்தில் வந்தது வினை.
பாழும் விதியால் துயரே துணை

விதவையென
விலக்கிடும்
மாறா சமூகம்
நிம்மதியைப் பறிக்கும்
மனதையும் வதைக்கும்.

காலமிட்ட கட்டளையை
மாற்றுவது எளிதா
ஓலமிட்டு ஒதுக்கிடும்
சமூகத்தை திருத்திட முடியாதா?

போலிப் புன்னகைக்குள்
பதுங்கிக் கிடக்கிறது
அவள் சரித்திரம்
ஆழியில் பேரலைகளாய்...
அவள் எண்ணங்கள் நிரந்தரம்.

கேள்விக்குறியாய்
நாளைய விடியல்
விழியோரங்களில்
வற்றா கண்ணீர்த் துளிகள்.

மானுடம் இங்கு
மாறிட வேண்டும்.
மாட்சிமை எங்கும்
ஓங்கிட வேண்டும்.
மங்கையர் வாழ்வென்றும்
மலர்ந்து மணம் வீசிட வேண்டும்.

லரீபா பதுர்தீன்.
கலேவல



# ஊமையின் ஒலிக்கு உயிரில்லை

மகனே பரீட்சை நெருங்குகிறது
படி என்றேன் .
நான் படிக்கின்றேன் என்றாய் .

நீ கனவில் படிப்பதை யெல்லாம்,
வினாத்தாளில் விடையாக
எழுத முடியாது என்பதை
நான் அறிவேன்.

இருந்தாலும், கட்டாயப்படுத்தவில்லை
நிசமாகப் படிக்க நீ நினைத்தாலே,
தலைவலி வரும்.

போனையே உற்றுப் பார்ப்பதால்
கண்வலி வரும் .
குனிந்து கொண்டு வாசிப்பதால்,
கழுத்துவலி வரும்.
ஓரிடத்தில் இருந்து கொண்டே
இருப்பதனால், முதுகுவலி வரும்.

கூடவே, ஒற்றைத் தலைவலி
ஒட்டிக் கொள்ளும் என்பதால்,
ஒதுங்கிக் கொண்டேன்.

பரீட்சைக்குத் தயாராகாமல்,
பரீட்சை எழுதப் போகும்
முதல் நாள் ,
நான் நாளை பரீட்சை
எழுதப் போகின்றேன் என்று ,
யாரிடமும் சொல்லி விடாதே.
உன் பெறுபேற்றுக்காக அவர்கள்,
மிகுந்த எதிர்பார்ப்போடு
காத்திருப்பார்கள்.

பந்தும் துடுப்பும் இனிப்பதைப்போல்,
பக்குவப் படுத்தும் கல்வி
உருசிப்பதில்லை என்று
எனக்குத் தெரியும். அதனால்தான்,
படியென்று சொல்லும் என்
முயற்சியைக் கைவிட்டு விட்டேன்.

நான் அனுபவப்
பட்டுச் சொல்லும் அறிவுரையை,
அவஸ்தைப் பட்டுத்தான் நீ
அறிந்து கொள்ள
ஆசைப்படுகின்றாய் என்றால்,
அதை நான் என்னவென்பது?

ஓர் ஏழையை உலகுக்கு
அடையாளம் காட்டும்
அற்புதக் கருவி,
கல்விதான் என்பதை நீ
எப்போது அறிவாய்?

தனவந்தன் அவன் பணத்தால்
மின் தூக்கியை உபயோகிப்பான்.
ஏழை நாம் அறிவுக்
கயிற்றினால் மாத்திரமே
ஏணி செய்ய முடியும்.

இந்த அறிவுரையை
என்றோ ஒருநாள் நீ, உன்
பிள்ளைகளுக்குக் கூறலாம்.
இல்லை
பேரன் பேர்த்திகளிடம் பகிரலாம்.

ஆனால் என்ன அவர்கள்
செவிடர்களாக இருப்பார்கள்.
ஏனெனில்
ஊமையின் ஒலிக்கு உயிரில்லை.

இப்படிக்கு உந்தன் தாய்.



**கலாபூஷணம்**
**இராணி பௌசியா பொலன்னறுவை.**

# Google Meet - நவீன தொடர்பாடலின் பரிணாமம் (தொழில்நுட்ப கட்டுரை)



‘பாத்திமா ஹகீமா அமீனுதீன், - ஓட்டமாவடி
B.A.(Hons), HNDip in psychology and counselling, ICT Technician NVQ Level - 04

இன்றைய டிஜிட்டல் உலகில், மனிதர்கள் புவியியல் ரீதியாக எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதற்கு மெய்நிகர் சந்திப்புத் தளங்கள் அத்தியாவசியமாகிவிட்டன. குறிப்பாக கொவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு தொலைதூர வேலை, ஆன்லைன் கல்வி, மற்றும் மெய்நிகர் நிகழ்வுகள் ஆகியவை அதிகரித்த நிலையில், வீடியோ கான்பரன்சிங் தளங்களுக்கான தேவை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்தது. இந்த டிஜிட்டல் புரட்சியில் **Google Meet** ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் எளிமையான பயனர் இடைமுகம், வலுவான அம்சங்கள், மற்றும் கூகுளின் சுற்றுச்சூழல் அமைப்புடன் இது கொண்ட தடையற்ற ஒருங்கிணைப்பு ஆகியவை, தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு இது ஒரு சிறந்த தேர்வாக அமைகிறது. இந்தக் கட்டுரையில் **Google Meet** இன் பல்வேறு அம்சங்கள், அதன் வரலாறு, பயன்பாடுகள், மற்றும் பிற போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் அதன் நிலை குறித்து விரிவாக ஆராய்வோம்.

## Google Meet என்றால் என்ன?

**Google Meet** என்பது **Google** ஆல் உருவாக்கப்பட்ட ஒரு வீடியோ கான்பரன்சிங் சேவையாகும். இது முதலில் **Google Hangouts Meet** என அழைக்கப்பட்டது. இது பாதுகாப்பான, உயர்தர வீடியோ சந்திப்புகளை எந்த சாதனத்திலிருந்தும் நடத்த அனுமதிக்கிறது. **Google Meet** ஆனது ஜிமெயில், கூகுள் காலண்டர், மற்றும் கூகுள் டாக்ஸ் போன்ற பிற கூகுள் சேவைகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது தனிநபர்கள் மற்றும் பெரிய நிறுவனங்கள் இரண்டுக்குமான, சந்திப்புகளைத் திட்டமிடுவது, சேர்ப்பது, மற்றும் நிர்வகிப்பதை எளிதாக்குகிறது. தனிப்பட்ட மற்றும் தொழில்முறை பயன்பாடுகளுக்கு இது ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டு, தெளிவான ஆடியோ மற்றும் வீடியோ அனுபவத்தை வழங்குகிறது.

## Google Meet வரலாறு

**Google Meet** இன் வரலாறு **Google** இன் மெசேஜிங் சேவைகளின் பரிணாம வளர்ச்சியில் வேரூன்றியுள்ளது. ஆரம்பத்தில், கூகுளிடம் **Google Talk** (2005) என்றொரு சேவை இருந்தது, அது டெக்ஸ்ட் சாட் மற்றும் வாய்ஸ் காலிங் ஆகியவற்றை வழங்கியது. பின்னர், **Google Hangouts** (2013) அறிமுகப்படுத்தப்பட்டது. இது டெக்ஸ்ட் சாட்,

வீடியோ கால், மற்றும் வாய்ஸ் கால் ஆகியவற்றை ஒருங்கிணைத்தது. 2017 ஆம் ஆண்டில், கூகுள் **Hangouts** சேவையை வணிகப் பயனர்களுக்காக இரண்டு பகுதிகளாகப் பிரித்தது: ஒன்று **Google Chat** (உரை அடிப்படையி லான தகவல்தொடர்புக்கு) மற்றும் மற் றொன்று **Google Meet** (வீடியோ கான் பரன்சிங்கிற்கு).

ஆரம்பத்தில் **Google Workspace** (முன்னர் **G Suite**) சந்தாதாரர்களுக்கு மட்டுமே **Google Meet** கிடைத்தது. ஆனால், 2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக, தொலைதூரத் தொடர்புகளின் தேவை அதிகரித்தபோது, கூகுள் **Meet** ஐ அனைத்து **Google** கணக்கு வைத் திருப்பவர்களுக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்தது. இந்த நடவ டிக்கை கூகுள் **Meet** இன் பயன் பாட்டை வெகுவாக அதிகரிக்கச் செய் ததுடன், இது ஒரு முன்னணி வீடியோ கான்பரன்சிங் தளமாக நிலைநிறுத்தப் படுவதற்கும் காரணமாக அமைந்தது.

**Google Meet** இலுள்ள முக்கிய அம்சங் கள்

**Google Meet** பல்வேறு பயனுள்ள அம் சங்களை வழங்குகிறது, அவை பயனர் அனுபவத்தை மேம்படுத்துபவையாக அமைகின்றன.

1. உயர்தர வீடியோ மற்றும் ஆடியோ: தெளிவான வீடியோ மற்றும் ஆடியோ அனுபவத்தை வழங்குகிறது, சந்திப்புக ளின் செயல்திறனை அதிகரிக்கிறது.

2. திரை பகிர்தல் (**Screen Sharing**): பயனர்கள் தங்கள் முழுத் திரை யையோ அல்லது குறிப்பிட்ட சாளரத் தையோ மற்ற பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறது, விளக்கக்காட்சிகள் மற்றும் கூட்டுப் பணிகளுக்கு இது இன்றியமையாதது.

3. அரட்டை (**Chat**):

சந்திப்பின் போது பங்கேற்பாளர்கள் ஒருவருக்கொருவர் உரைச் செய்திக ளைப் பரிமாறிக் கொள்ள முடியும், இது வாய்மொழித் தகவல்தொடர்புக்கு இடையூறு செய்யாமல் கேள்விகள் கேட்க அல்லது இணைப்புகளைப் பகிர உதவுகிறது.

4. சந்திப்புப் பதிவு (**Meeting Recording**): **Google Workspace** பயனர்கள் சந்திப்புகளைப் பதிவு செய்து, பின்னர் மறுபரிசீலனை செய்ய அல்லது கலந்து கொள்ளாதவர்களுக் குப் பகிர இந்த அம்சம் உதவுகிறது.

5. பின்னணி சத்தம் ரத்துசெய்தல் (**Noise Cancellation**): பின்னணி இரைச் சலைக் குறைத்து, பேச்சாளரின் குர லைத் தெளிவுபடுத்துகிறது.

6. பதில் தலைப்புகள் (**Captions)**: தானியங்கு நேரடி தலைப்புகளை வழங்குகிறது, இது காது கேளாதவர்க ளுக்கு அல்லது வெவ்வேறு மொழி பேசும் பங்கேற்பாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

7. பாதுகாப்பு அம்சங்கள் (**Security policy**): வலுவான குறியாக்கம் (**encryption**), கட்டுப்படுத்தப்பட்ட அணுகல், மற்றும் துஷ்பிரயோகத் தடுப்பு அம்சங்கள் மூலம் சந்திப்புக ளின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

8. அதிக பங்கேற்பாளர்கள் வரம்பு (**100+ participants**): **Google meet** திட்டத்தின் வகையைப் பொறுத்து நூற்றுக்கணக்கான பங்கேற்பாளர்களை ஆதரிக்கிறது, இது பெரிய நிகழ்வுகள் அல்லது வெபினர்களுக்கு ஏற்றதாக அமைகிறது.

**Google Meet** உள்நுழையும் முறை

**Google Meet** இல் உள்நுழைவது மிகவும் எளிதானது. முதலில் உங்களுக்கு ஒரு **Google** கணக்கு தேவை.

1. **Meet.google.com** ஐப் பார்வையிடவும்: உங்கள் இணைய உலாவியில் **meet.google.com** என்ற முகவரியைத் தட்டச்சு செய்யவும்.

2. **Google** கணக்கில் உள்நுழையவும்: உங்கள் **Google** கணக்கில் ஏற்கனவே உள்நுழைந்திருந்தால், நீங்கள் நேரடியாக **Meet** பக்கத்திற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள். இல்லையென்றால், உங்கள் **Google** மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி உள்நுழையுமாறு கேட்கப்படுவீர்கள்.

3. சந்திப்பில் சேரவும் அல்லது உருவாக்கவும்: உள்நுழைந்த பிறகு, நீங்கள் ஒரு புதிய சந்திப்பை உருவாக்கலாம் அல்லது ஏற்கனவே உள்ள சந்திப்புக் குறியீடு அல்லது இணைப்பு மூலம் சந்திப்பில் சேரலாம்.

மீட்டிங் லிங்க் உருவாக்கும் முறை

புதிய **Google Meet** சந்திப்பு இணைப்பை உருவாக்குவது மிக எளிதான விடயமாகும்.

1. Google Meet வலைத்தளத்திற்குச் செல்லவும்: **meet.google.com** க்குச் சென்று உங்கள் **Google** கணக்கில் உள்நுழையவும்.

2. "புதிய சந்திப்பு" (**New meeting**) என்பதைக் கிளிக் செய்யவும்: உங்களுக்கு மூன்று விருப்பங்கள் காட்டப்படும்: "பின்னர் ஒரு குறித்த நேரத்தில் ஒரு சந்திப்பைத் தொடங்கு" (**Create a meeting for later):** இது ஒரு சந்திப்பு இணைப்பை உருவாக்கி, நீங்கள் பின்னர் பயன்படுத்த உதவும்.

-"உடனடி சந்திப்பைத் தொடங்கு" (**Start an instant meeting**): உடனடியாக ஒரு சந்திப்பைத் தொடங்கும், மேலும் சந்திப்பு இணைப்பை நீங்கள் பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

-"**Google Calendar** இல் திட்டமிடு" (**Schedule in Google Calendar**): ,J **Google Calendar** ஐத் திறந்து, சந்திப்பைத் திட்டமிடவும், அழைப்பாளர்களை சேர்க்கவும், மற்றும் சந்திப்பு விவரங்களை நிர்வகிக்கவும் உங்களை அனுமதிக்கிறது.

3. இணைப்பைப் பகிரவும்:

நீங்கள் சந்திப்பை உருவாக்கியதும், மற்றவர்களை அழைக்க சந்திப்பு இணைப்பு (Meeting link) அல்லது குறியீடு (**code**) உங்களுக்குக் கிடைக்கும். இந்த இணைப்பை மின்னஞ்சல், அரட்டை அல்லது பிற செய்தியிடல் தளங்கள் மூலம் பகிரலாம்.

நேரடியாக மீட்டிங்கில் நுழையும் முறை

**Google Meet** இல் நேரடியாக ஒரு சந்திப்பில் சேர்வதற்கு பல வழிகள் உள்ளன.

1. சந்திப்பு இணைப்பு (**Meeting link**) மூலம்: அழைப்பாளர் அனுப்பிய **Google Meet** இணைப்பைக் கிளிக் செய்யவும். இது நேரடியாக சந்திப்புப் பக்கத்திற்கு உங்களை அழைத்துச் செல்லும்.

2. சந்திப்புக் குறியீடு (**Meeting code**) மூலம்: **meet.google.com** க்குச் சென்று, "ஒரு குறியீட்டை உள்ளிடவும் அல்லது ஒரு இணைப்பை உள்ளிடவும்" (**Enter a code or link**) என்ற பெட்டியில் சந்திப்புக் குறியீட்டை உள்ளிட்டு, "சேர்" (**Join**) என்பதைக் கிளிக் செய்யவும்.

3. **Google Calendar** மூலம்: நீங்கள் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தால், உங்கள் **Google Calendar** இல் சந்திப்பு நிகழ்வைக் காண்பீர்கள். நிகழ்வைக் கிளிக் செய்து, "**Google Meet** உடன் சேர்" (**Join with Google Meet**) என்பதைக் கிளிக் செய்யவும்.

4. **Gmail** மூலம்: **Gmail** இண்டர்பேஸில், இடதுபுறத்தில் உள்ள "**Meet**" பிரிவில் வரவிருக்கும் சந்திப்புகளைக் காணலாம் அல்லது ஒரு புதிய சந்திப்பைத் தொடங்கலாம்.

## தனித்துவமான பயன்பாடுகள்

**Google Meet** இன் பல்துறைத்திறன் அதை பல்வேறு சூழல்களில் பயன்படுத்த அனுமதிக்கிறது.

1. தொலைதூரக் கல்வி:

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகளை நடத்தவும், விளக்கக்காட்சிகளை வழங்கவும், மற்றும் கலந்துரையாடல்களை நடத்தவும் உதவுகிறது.

2. வணிகக் கூட்டங்கள்:

நிறுவனங்கள் உள் மற்றும் வெளிப்புற சந்திப்புகள், வாடிக்கையாளர் சந்திப்புகள், மற்றும் பங்குதாரர் கலந்துரையாடல்களை நடத்த இது ஒரு சிறந்த தளமாகும்.

3. மருத்துவ ஆலோசனை (**Telehealth**) மருத்துவர்கள் தொலைதூரத்தில் உள்ள நோயாளிகளுக்கு ஆலோசனைகளை வழங்கவும், பின்தொடர் சந்திப்புகளை நடத்தவும் உதவுகிறது.

4. நேர்காணல்கள்:

பணியமர்த்தல் மேலாளர்கள் விண்ணப்பதாரர்களுடன் தொலைதூர நேர்காணல்களை நடத்த இது வசதியாக உள்ளது.

5. நிகழ்வு ஹோஸ்டிங்:

வெபினார்கள், கருத்தரங்குகள், மற்றும் பெருநிறுவன நிகழ்வுகளை நடத்துவதற்குப் பயன்படுத்தலாம்.

6. குடும்ப மற்றும் நண்பர் சந்திப்புகள்:

உலகெங்கிலும் உள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடன் தொடர்பில் இருக்க உதவுகிறது.

7. திட்டக் கூட்டுப்பணி **(Project Collaboration):**

குழு உறுப்பினர்கள் ஆவணங்களைப்

பகிரவும், திட்ட முன்னேற்றத்தைப் பற்றி விவாதிக்கவும், மற்றும் கூட்டு முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.

8. வாடிக்கையாளர் ஆதரவு:

வாடிக்கையாளர் சேவை முகவர்கள் வாடிக்கையாளர்களுக்கு தொலை நிலை ஆதரவை வழங்க வீடியோ அழைப்புகளைப் பயன்படுத்தலாம்.

**Zoom VS Google Meet**

**Zoom** மற்றும் **Google Meet** இரண்டும் பிரபலமான வீடியோ கான்பரன்சிங் தளங்கள் என்றாலும், அவற்றுக்கிடையே சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன.

1. ஒருங்கிணைப்பு:

**Google Meet** ஆனது **Google Workspace** (**Gmail, Calendar, Drive**) உடன் ஆழமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, இது **Google** சுற்றுச்சூழல் அமைப்பைப் பயன்படுத்துபவர்களுக்கு ஒரு தடையற்ற அனுபவத்தை வழங்குகிறது. **Zoom** ஆனது பரந்த அளவிலான மூன்றாம் தரப்பு பயன்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

2. இலவசத் திட்டம்:

**Zoom** இன் இலவசத் திட்டம் 40 நிமிடங்களுக்கு வரம்பிடப்பட்ட சந்திப்புகளை (3 அல்லது அதற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன்) அனுமதிக்கிறது. **Google Meet** இன் இலவசத் திட்டம் 60 நிமிடங்கள் வரை (3 அல்லது அதற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன்) நீட்டிக்கப்பட்ட சந்திப்புகளை வழங்குகிறது.

3. பயனர் இடைமுகம்:

**Google Meet** அதன் எளிமையான மற்றும் உள்ளுணர்வு இடைமுகத்திற்காக அறியப்படுகிறது, இது புதிய பயனர்களுக்கு எளிதாகப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. **Zoom** அதிக அம்சங்களைக் கொண்டுள்ளது, இது சில சமயங்களில் சற்றே சிக்கலானதாகத் தோன்றலாம்.

4. பாதுகாப்பு:

இரு தளங்களும் வலுவான பாதுகாப்பு அம்சங்களை வழங்குகின்றன. **Google Meet** அதன் கூகிள் உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளை நம்பியுள்ளது, அதே நேரத்தில் **Zoom** சமீபத்திய ஆண்டுகளில் அதன் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தியுள்ளது.

5. அம்சங்கள்:

**Zoom** ஆனது பிரேக்அவுட் அறைகள், மேம்பட்ட வெபினார் செயல்பாடுகள், மற்றும் மெய்நிகர் பின்னணிகளின் பெரிய நூலகம் போன்ற அம்சங்களில் சற்றே முன்னணியில் உள்ளது. **Google Meet** படிப்படியாக அதன் அம்சத் தொகுப்பை விரிவுபடுத்துகிறது.

6. பதிவுசெய்தல்:

இரு தளங்களும் சந்திப்புப் பதிவு செய்யும் திறனை வழங்குகின்றன, ஆனால் குறிப்பிட்ட திட்டங்களைப் பொறுத்து சேமிப்பக இடமும் அம்சங்களும் வேறுபடுகின்றன.

7. நிறுவன பயன்பாடு:

**Google Meet** பெரும்பாலும் வணிகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்க

ளுக்கான பாதுகாப்பான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட தீர்வாகக் காணப்படுகிறது. **Zoom** ஆனது தனிப்பட்ட பயனர்கள், வணிகங்கள், மற்றும் பெரிய அளவிலான நிகழ்வுகளுக்கு மிகவும் பொதுவானது.

8. மொபைல் பயன்பாடு:

இரு தளங்களும் சிறப்பான மொபைல் பயன்பாடுகளைக் கொண்டுள்ளன, அவை பயணத்தின்போது சந்திப்புகளில் சேர அல்லது நடத்த உதவுகின்றன.

## எது சிறந்தது?

**Google Meet** மற்றும் **Zoom** ஆகியவற்றுக்கிடையே "சிறந்தது" என்பது உங்கள் குறிப்பிட்ட தேவைகளைப் பொறுத்தது.

* நீங்கள் ஏற்கனவே **Google Workspace** இன் தீவிரப் பயனராக இருந்து, **Google** இன் பிற சேவைகளுடன் தடையற்ற ஒருங்கிணைப்பை விரும்பினால், **Google Meet** ஒரு சிறந்த தேர்வாகும். இதன் எளிமை, பாதுகாப்பு, மற்றும் இலவச அணுகல் ஆகியவை சிறிய குழுக்கள், கல்வி நிறுவனங்கள், மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு ஏற்றது.

* உங்களுக்கு பிரேக்அவுட் அறைகள், மேம்பட்ட வெபினார் அம்சங்கள், மற்றும் பல மூன்றாம் தரப்பு ஒருங்கிணைப்புகள் தேவைப்பட்டால், **Zoom** ஒரு சிறந்த தேர்வாக இருக்கலாம். இது பெரிய அளவிலான நிகழ்வுகள் மற்றும் அதிக பிரத்தியேக அம்சங்கள் தேவைப்படும் வணிகங்களுக்கு மிகவும் பொருத்தமானது.

சுருக்கமாகச் சொன்னால், எளிமை, ஒருங்கிணைப்பு, மற்றும் நம்பகத்தன்மைக்கு **Google Meet** சிறந்த தெரிவு. அதிக அம்சங்கள் மற்றும் நெகிழ்வுத் தன்மைக்கு **Zoom** சிறந்தது.

மேற்படி அடிப்படையில் நோக்கும் போது **Google Meet,** கூகுளின் பரந்த சுற்றுச்சூழல் அமைப்புடன் அதன் வலுவான ஒருங்கிணைப்பு, எளிமையான பயனர் இடைமுகம், மற்றும் அத்தியாவசிய வீடியோ கான்பரன்சிங் அம்சங்களுடன், நவீன டிஜிட்டல் உலகில் ஒரு இன்றியமையாத கருவியாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. தனிப்பட்ட சந்திப்புகள் முதல் பெரிய நிறுவனக் கூட்டங்கள் வரை, இது பயனர்கள் உலகெங்கிலும் உள்ள மற்றவர்களுடன் திறம்பட தொடர்பு கொள்ள ஒரு பாதுகாப்பான மற்றும் நம்பகமான தளத்தை வழங்குகிறது. அதன் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் மேம்பாடுகளுடன், **Google Meet** எதிர்காலத்தில் டிஜிட்டல் தகவல்தொடர்புகளில் ஒரு முன்னணி பங்கைத் தொடர்ந்து வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. தொழில்நுட்பம் முன்னேறும்போது, **Google Meet** போன்ற தளங்கள் நம்மை இணைத்து வைத்திருப்பதில் முக்கிய பங்கு வகிக்கும்.

# பொய்த்துப் போகும் நீதி

அவிரியின் சிறுகதை



சுஸானா முனாஸ். மூதூர்.

அந்த கைத்தொலைபேசியையே எதிர்பார்ப்புடன் அடிக்கொரு தடவை பார்த்தபடி, இரவில் தண்ணீர் ஊற்றி வைத்திருந்த, பழைய சோற்றில் இருந்த தண்ணீரை வடித்து, அந்தச் சோற்றின் மேல், பக்கத்து வீட்டில் குடியிருக்கும் மாமி தந்த தயிரை ஊற்றி கொஞ்சமாய் உப்பும், சீனியும் கலந்து பிசைந்து, இரண்டு கோப்பைகளில் அள்ளி, பள்ளி செல்லும் தன் இரண்டு குழந்தைகளுக்கும் கொடுத்தாள் றுசைதா. பாடசாலைக் சீருடையில் தயாராகி வந்து, ஓரம் கிழிந்திருந்த பாயில் அமர்ந்து, தாய் நீட்டிய கோப்பைகளை வாங்கி உண்ணத் தொடங்கினார்கள் அவளின் குழந்தைகள். மூத்தவன் பத்தாம் ஆண்டிலும், இளைய பெண் எட்டாம் ஆண்டிலும் கல்வி பயில்கிறார்கள்.

“உம்மா.... நாளைக்கு தான் பாடசாலைக் கட்டணம் கட்டுற கடைசி நாள்... எல்லோரும் கட்டியாச்சு... நா மட்டும்தாம்மா இன்னும் கட்டல...” மகன் நுசைரின் முகத்தில் தெரிந்த சிறு அவமானத்தின் பிரதிபலிப்பு அவனது வார்த்தைகளிலும் கூட சற்றே தெரியத்தான் செய்தது. பாடசாலையில் மாணவர் மத்தியில் தன் குழந்தை எப்படி அவமானப்பட்டுப் போனானோ என்கிற பரிதவிப்பில் அவள் முகம் சுருங்கிற்று.

“ஓமோம்... நானும் கட்டணும்மா.... மறந்தே போனேன்... நேத்தும் டீச்சர் எங்கிட்ட கண்டிப்பா சொன்னாங்க...” வாயில் இருந்த சோற்றை ருசித்த படியே சொன்னாள் நுஸ்ரத் .

பதினைந்து வயதை எட்டியிருந்த பெரியவனான நுசைருக்கு வீட்டின் நிலவரம் ஓரளவு புரிந்து தான் இருந்தது. தந்தையின் ஆதரவின்றி தாயின் சிறு உழைப்பை மட்டுமே நம்பியிருக்கும் அவனுக்கு தாயின் கஷ்டங்கள் தெரியும்... சின்னவள் நுஸ்ரத் இன்னும் சிறுபிள்ளை..... சுதந்திரமாய் சிறகடிக்கும் பட்டாம்பூச்சி... வாழ்க்கையின் சுமைகள் தெரியாத சிட்டுக் குருவி... றுசைதாவின் விழிகள் மீண்டும் ஒரு தடவை கைத்தொலை பேசியை நோக்கி விட்டு மகனின் முகத்தில் படிந்தன... தாயை வருத்துகிறோமோ என்கிற பச்சாதாபம் அதில் தெரிந்ததை அவள் உணர்ந்து தான் இருந்தாள். இந்தச் சிறு வயதிலேயே தாயைக் கஷ்டப்படுத்திவிடக்கூடாது என்கிற ஆதங்கத்துடன் கண்களில் வலிமின்ன ஏறிட்ட மகனை ஆதுரத்துடன் நோக்கி

“இன்ஷா அல்லாஹ் நாளைக்கு கட்டிடலாம் மகன் ...

ஆயிரத்து ஐநூறுதானே... நா ஏற்பாடு பண்ணிடறேன்... நுஸ்ரத் குட்டி உங்க ளுக்கும் தான்... சரியா...” பிள்ளைக ளுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக மெலிதான புன்னகையுடன் சொன்னாள் றுசைதா...

குழந்தைகள் தாயின் வார்த் தைகளில் உண்டான நம்பிக்கையு டன் பாடசாலைக்கு புறப்பட்டு போய் விட்டிருந்தார்கள். ஆனால் றுசைதா வின் மனமோ கலங்கித் தவித்தது. பிள்ளைகளுக்கு நம்பிக்கை ஊட்டி விட்டாயிற்று... ஆனால் பணத்துக்கு எங்கே போவது... இரண்டு பேருக்கும் பாடசாலைக் கட்டணத்துக்கு மூவாயி ரம் ரூபா வேண்டும்... நான்கு மாதங்க ளாய் கட்டப்படாத தாபரிப்பு பணத்துக் காக இரண்டு வாரங்களாய் அவள் காதி நீதிமன்றுக்கும், வீட்டுக்குமாய் அலைகிறாள். இன்று நாளையென்று இந்தக் காதியார் ஏமாற்றிக் கொண்டே தான் இருக்கிறார். பத்து வருடங்களாகி விட்டது கணவன் நஸாரைப் பிரிந்து. ஊருக்கு ஒரு மனைவி அவனுக்கு. ஆரம்பத்தில் அரசல்புரசலாக கேள்விப் பட்ட போது நம்பவில்லை அவள். இபா தத்தான, ஜமாஅத்தில் ஈடுபாடுள்ள பக்திப்பழமாக அவன் தன்னை இனம் காட்டிக் கொண்டதில் தந்தையும் மகிழ்ந்து தான் அவளுக்கு நஸாரை மணம் முடித்துக் கொடுத்திருந்தார். ஆரம்பத்தில் அவன் என்னவோ ஒழுங் காகத்தான் குடித்தனம் நடாத்தினான். இரண்டு வருட இடைவெளியில் இரண்டு குழந்தைகளும் கிடைத்த பின் அவனது போக்கில் மாற்றம் உண்டா கிற்று. அடுத்திருந்த ஊரில் ஒரு பெண் ணுடன் ஏற்பட்டிருந்த பழக்கம் திரும ணம் வரை சென்ற பின் தான் றுசைதா விழித்தாள். படிப்பறிவு அற்றவள். இத னைக் கொஞ்ச நாளில் ஏற்றுக்கொள் வாள், இருவருடனும் வாழ்ந்துவிடலாம் என்கிற நஸாரின் நம்பிக்கையை பொய் யாக்கி அவனது துரோகத்தை தாங்க முடியாமல், பிடிவாதமாய் அவனைப் பிரிந்தாள் றுசைதா. அன்று அவன் கோபத்துடன், தான் வாங்கிக் கொடுத்த பிளாஸ்டிக் ஜக்கைக் கூட விடாமல், எல்லா வீட்டுப் பொருட்களையும் அள் ளிக் கொண்டு அவன் கிளம்பிய போது அருவருத்துப்போனாள் அவள். அவனி டமிருந்து எதனையும் பெற்றுக்கொள் ளக் கூடாது என்கிற வைராக்கியம் பிறந்தாலும், இரண்டு குழந்தைகளின் பராமரிப்புக்காக, வேறு வருமானங்க ளற்ற அவளால் அந்த வைராக்கி யத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ள முடியவில்லை.

விவாகரத்தின்போது இரண்டு குழந்தைகளுக்குமான தாபரிப்பு பண மாக மாதம் ஐயாயிரம் றுசைதாவிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பா னது. அதனை அவன் ஒரு தடவையா வது சரியான நேரத்தில் கட்டிய தில்லை. ஒவ்வொரு தடவையும் அவள் போராடித்தான் அதனைப் பெற வேண்டி இருந்தது. அதிலும் அந்த காதியார் சரி யான பணப் பேய்.. எவன் ஒரு ரூபாய் கொடுத்தாலும் அவன் பக்கம் சாய்ந்து விடுவார். றுசைதாவின் தந்தை உயி ரோடு இருந்தவரை நான்கு ஐந்து தடவை அலைந்த பிறகு தந்தையின் கண்டிப்பில் எப்படியாவது பெற்றுத் தந் திருந்தார். தந்தை இறந்து போன இந்த இரண்டு வருடங்களாக ஒவ்வொரு தட வையும் பணத்தைப் பெறுவது றுசைதா வைப் பொறுத்தவரை குதிரைக் கொம் பாகவே இருந்தது. அதற்காகப்

☞ 10

போராடிப், போராடி அலுத்துப் போனாள் அவள். மாவிடிப்பதும், கோப்பி, மிளகாய் அரைப்பதும், பல காரம் சுட்டு விற்பதும், இரவில் இடியப் பம் அவிப்பதும் என்று சோர்வில்லாமல் உழைத்து குழந்தைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறாள் றுசைதா. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை தான் அதுவும் மொத்தப் பணமும் தரா மல் இழுத்தடித்துத்தான் அவன் பணம் தருவான். அதற்கு காதியாரும் உடந்தை. நஸார் பெரிய மரக்கறிக் கடை ஒன்று வைத்திருக்கிறான். அங்கி ருந்து காதியாரின் வீட்டுக்கு பணமில் லாமல் வேண்டிய மரக்கறி போகும். கூடவே பழங்களும்.. இந்த சலுகையை றுசைதாவுக்காக வாதாடி இழக்க காதி யாருக்கு மனமில்லை. தன் சுகத்தை அடுத்துத்தான் மற்றவர்களின் சுகம். றுசைதாவும் அவளது குழந்தைகளும் எப்படிக் கஷ்டப்பட்டாலும் அதை பற் றிய கவலை அவருக்கு அனாவசியம். பசிய காய்கறிகளும், பழங்களும் செல வின்றி கிடைக்கும் போது மற்றவை பற்றிய கவலை அவருக்கெதற்கு .

இதுவரை நஸார் றுசைதா வுக்கு பின் இரண்டு பெண்களை மண முடித்து இன்னும் இரண்டு குழந்தைக ளுக்கும் தாபரிப்பு பணம் கட்டிக் கொண்டிருக்கிறான்.. காதியாரின் பலவீ னத்தை தனக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு பணம் கட்டுவதை தாமதப்படுத்திக் கொண்டே இருக்கி றான். தந்தையின் துணையுமில்லாமல் நீதிமன்றத்தையும் அணுக முடியாமல் தவித்து போனாள் றுசைதா... ஒவ் வொரு தடவையும் இது வேண்டாம் விட்டு விடுவோம் என்று மனம் அலுக் கும் போது

“ம்கூம்... இது பிள்ளைகளுக் கான உரிமை... இதனையும் பெற்றுக் கொள்ளாது போனால் அது நஸா ருக்கே சாதகமாகிப் போகும்...” என்று தன்னை உற்சாகப்படுத்துவாள் அவள். அது மட்டுமில்லாமல் இந்த காதியா ரைப் போன்றவர்களை எப்படி காதி களாக நியமிக்கிறார்கள் என்கிற வியப் பேற்படும் அவளுக்கு. நீதியை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பு அவர்களுக் கில்லையா... அபலையாய் நிற்கும் பெண்ணினதும், அந்தக் குழந்தைகளி னதும் நலனைப் பேணும் சமூக அக் கறை கூடவா இருக்காது.... என்ன மனி தர்கள் இவர்கள் என்கிற ஆத்திரம் பீறிடும்... கூடவே கையாலாகாதவர்க ளுக்கு என்ன ஆத்திரம் என்கிற சுயபச் சாதாபத்தில் மனம் கரையும். இத னைத் தட்டிக் கேட்க முடிந்தவர்களும் கூட தனக்கென்ன வந்தது என்கிற விட்டேத்தியான மனப்பான்மையுடன் , வெறுமனே பார்த்துக் கொண்டு இருக் கும் போது என்னைப்போல அபலைக ளுக்கு விடிவேது என்கிற வருத்தம் அவளை வதைக்கும்.

கிட்டத்தட்ட நான்கு மாதங்க ளாய் அவளுக்கு தாபரிப்புப் பணம் கிடைக்கவில்லை. இரண்டு வாரங்க ளாய் இதற்காக அவள் அலைந்து கொண்டு தான் இருக்கிறாள். நேற்றும் கூட காதியாரிடம் போய்க் கேட்ட போது

“தங்கச்சி... நாளைக்கு கட்டா யம் கிடைக்கும்.. காலையில் போன் பண்றேன்.. நீ சீக்கிரமாகவே வந்து

விடு...” என்று நம்பிக்கை தந்திருந்தார். இந்த நிமிடம் வரை அவளுக்கு அழைப்பு வரவில்லை. எங்கே நஸார் அனுப்பிய மரக்கறிகள் அவரது வார்த்தையை காற்றில் பறக்கவிட்டதோ தெரியவில்லையே....” நம்பிக்கை இழந்து போனாள் அவள்... நீதி பெற்றுத்தர வேண்டியவர்களே அநீதிக்கு துணை போனால் என்ன தான் செய்வது. இப்போது பிள்ளைகளின் பாடசாலைக் கட்டணத்துக்கு என்ன வழி... அவமானப்பட்டு நிற்கும் குழந்தைகளின் முகங்கள் கற்பனையில் தெரிய, விதிர்த்த உடலை இயல்பாக்கும் வகையில் இருகரங்களையும் ஏந்தி” ஆண்டவனே வழிகாட்டு....” என்று இறைஞ்சியபடியே ஒற்றையாய் அவள் விரலில் மின்னிய அந்த தங்க மோதிரத்தில் படிந்தது நீர் நிரம்பிய அவள் விழிகள்.

# புன்னகை மறந்த பூக்கள்.

புன்னகைக்கும்
பூக்கள் உள்ள தோட்டங்களைக்
கொஞ்சம் காட்டுங்கள்
சற்றுநேரம் அங்கு நான்
அமர்ந்து செல்ல
ஆசைப்படுகின்றேன்

சுற்றும்
பூமிக்குள்ளிருந்து
எட்டிப் பார்க்கும்
சின்னப் பூவிற்குள்ளும்
ஏன் இத்தனை
பூகம்பம்?

என் சின்ன இதயம்
வலிக்கின்றது
வருடுவதற்குக் கூட
மென்மையான
இதழ்கள் இல்லையே
கோரப்பார்வையின்
கொடிய முகங்களாக
அவையும் மாறிப்
போயினவோ? .

அழகிய புன்னகைப்
பூக்களைத் தேடித்தேடி
நான் ஓய்ந்து போனேன்
நந்தவனங்கள் கூட
வரட்சியாய்ச் சிரிக்கின்றனவே

நவீனத்துவ
வாழ்க்கைக்குள் அத்தனையும்
நசுங்கித்தான்
போய்விட்டனவோ?

வருங்காலம்
கொஞ்சம் மகிழட்டும்
புன்னகைப் பூக்களைப்
பூமியெங்கும் விரைந்து
நாட்டிடுங்கள்.



**திருமலை ஜனூான் கதிஜா**

# மரணப்பிராத்தனை

மரணம் நமக்கான
வாழ்வின் நிதர்சனம்.
ஆலமுல் அர்வா
ஆன்மாவின் இருப்பிடம்.

தொழுது மன்றாடி,
இறையருள் பெற்று நாம்,
அவன் காலடி சேர
வாழ்வைப் பேணவும் வேண்டும்.
இடையறா பிரார்த்தனைகளால்,
சுவனத்திற்காக
மனுச் செய்யவும் வேண்டும்.

நிரந்தரமில்லா இவ்வுலகில்,
வையகமே நிரந்தரமென்று,
நிம்மதி தேடியலையும்
அறிவிலிகள் நாங்கள்.
மனிதநேயம் மறந்து,
மனித லேபலில் வாழும்
கையாலாகதவர்கள் நாங்கள்.

இறையச்சம் துறந்து,
சொத்து சுகம் பெரிதென தேடும்
அற்ப வாழ்வில்,
சோதனைகள் சூழ்ந்து,
வேதனைகள் விளைவிக்கிறோம்.

இறையழைப்பு,
நம் பிடரியில் காத்திருக்கிறது.
நாம்தானே கண்டு கொள்வதில்லை.
மண்ணறைக்கான தேடல்களை,
நன்மைகளாக்கி
கோர்த்து வைப்போம்.
அது சேர்த்து வைக்கும் சுவனத்தில்.

சுய நினைவோடு,
இம்மையில் விதைத்தவை,
மஹ்ஷரில் நிழலாக
எம்மைப் பின் தொடரும்.
திக்ருகளும்
இறைமறை ஓதுதலும்,
நமக்கான கேடயங்கள்.

திரைமறைவு வாழ்வின்,
மண்ணறை வேதனைகளின்,
சோதனைகளிலிருந்து
எம்மை மீட்பவன்
அவன் ஒருவன் மட்டுமே.
அவனையே கேட்போம்.
அவனையே இறைஞ்சுவோம்.
அவனே எல்லாமுமானவன்.



**பானு ஜிப்ரி சாய்ந்தமருது**

# மண் இன்றிய பயிர்ச் செய்கை
## (Soilless Cultivation) /
## நீரூடக பயிர்ச் செய்கை (Hydrophonics)



மு.ஹ. முர்ஷிதா ஷிரீன்
விவசாய போதனாசிரியர் சம்மாந்துறை, இலங்கை.

மண் இன்றிய பயிர்ச் செய்கை என்பது மண்ணை பயன்படுத்தாமல் பயிர்களை வளர்க்கும் முறையாகும். இதில் தாவரங்கள் நீரில் கரைந்த போசணைகளை தமது வேர்களை பயன்படுத்தி பெற்றுக் கொள்வதனால் வளர்ச்சி அடைந்து விளைச்சலை தரும். இதற்காக நீர்த் தொகுதிகளில் ஊட்டச்சத்துக்களை கரைத்து பயிர்களின் வேர்களுக்கு வழங்கும் ஒரு முறை பயன்படுத்தப்படுகிறது. இதை ஹைட்ரோபோனிக்ஸ் / நீர் ஊடக பயிர்ச் செய்கை (**Hydrophonics**) எனவும் அழைக்கப்படும்.

மண் இன்றிய பயிர்ச் செய்கையின் முக்கிய நோக்கங்கள்

* மண் நோய், பூச்சி பிரச்சினைகள் இல்லாமல் பயிர்ச் செய்கையை மேற் கொள்ளுதல்.

* குறைந்தளவான இடத்தில் அதிக விளைச்சலை பெறுதல்.

* ஆண்டு முழுவதும் கட்டுப்படுத்தப் பட்ட சூழலில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுதல்.

* நீர் மற்றும் பசளையினை பேண்தகு முறையில் பயன்படுத்தல் .

மண் இன்றிய பயிரிடும் முக்கிய முறைகள்

# நீரூடக பயிர்ச் செய்கை.∴ **Hydroponics**:

* பயிர்களை போசணைகள் / ஊட்டச் சத்துக்கள் கரைந்த நீரில் வளர்ப்பது.

* வளர்ப்பதற்கு தேங்காய் நார் (**Cocopeat**), பெர்லைட் வெர்மிகு லைட் போன்ற ஊடகம் பயன்படுத்த லாம்.

முக்கிய வகைகள்:

* சிறிய குழாய் ஓடுவதன் மூலம்/ **Nutrition Film Technique ( NFT )**

* வேர்பகுதி முழுவதும் சத்து நீரில் மூழ்கி இருக்கும் **/water culture** (**DWC**)

* சொட்டு பசளை முறையில் சத்து நீர் வழங்குதல் **/ Drip system**

# காற்று பாசனம் / **Aeroponics**:

* தாவர வேர் பகுதி காற்றில் தொங்க விட்டு போசணை கலர்ந்த நீரை பனி / மூடல் (**mist**) வடிவில் தெளித்து வளர்த்தல்.

* வேகமான வளர்ச்சி, குறைந்த நீர் பயன்பாடு.

* பெரும்பாலும் ஆராய்ச்சி மையங்கள் உயர்தர நாற்று வளர்ப்பு மையங்களில் பயன்படும்.



☞ 14

# மீன் மற்றும் தாவர இணைச் செய்கை / **Aquaponics**:

* மீன் வளர்ப்பு மற்றும் ஹைட்ரோ போனிக்ஸ் இணைப்பான முறை.

* மீன்களின் கழிவு சத்துக்கள்:

தாவரங்களுக்கு உரமாகும் தாவரங் கள் நீரை சுத்தமாக்கி மீன்களுக்கு திருப்பி தரும்.

* சுற்றுச்சூழல் நேய முறை

தேவைப்படும் பொருட்கள்:

* போசணை பொருட்கள் (**NPK**, நுண் போசணைகள் / **Micronutrients**)

* **Pump**, குழாய்கள், **Timer**

* வளர்ப்பு ஊடகம் (**Cocopeat, Perlite**, **Vermiculture**, **Clay pebbles**)

* வளர்ப்பு தொட்டி / குழாய்கள்

* **PH** மற்றும் **EC** அளவிடும் கருவி

அனுகூலங்கள்:

* 80 - 90 **%** வரை நீர் சேமிக்கலாம்.

* மண்ணின் ஊடாக பரவும் நோய்கள், களைகள் இல்லாமல் சிறந்த விளைச் சலை பெறலாம்.

* வேகமான வளர்ச்சியினால் அதிகள வான விளைச்சலை பெறலாம்.

* நகர்புறங்களில் கூரைகள், மாடி வீடுகள், மற்றும் இடப்பற்றாக்குறை யான பிரதேசங்களில் பயிர்ச் செய் கையை மேற்கொள்ள சிறந்த முறை.

* ஆண்டு முழுவதும் பயிர்ச் செய் கையை மேற்கொள்ளலாம்.

பிரதிகூலங்கள்

* ஆரம்ப முதலீடு அதிகம்.

* தொழில்நுட்ப அறிவு தேவை.

* மின் வசதி மற்றும் பராமரிப்பு அவசி யம்.

* போசணை நீர் மற்றும் **PH** நில மையை அடிக்கடி கண்காணிக்க வேண்டும்.

நீரூடக பயிர்ச் செய்கையில் பயிரிடப் படுகின்ற பயிர்கள்

* இலை மரக்கறி வகைகள், பசளி, கொத்தமல்லி, புதினா, லெட்டுஸ் (**Lettuce**), துளசி

* தக்காளி, குடை மிளகாய், கறி மிள காய், மிளகாய் வெள்ளரி, ஜேக்கின், கத்தரி, தானியங்கள் (பீன்ஸ்)

* ஸ்ட்ராபெர்ரி (**Strawberry**), வந்தகை பழம் (**Watermelon**), **Melon**

* அலங்கார தாவரங்கள் (**Orchid**, அலங்கார பச்சை இலைச் செடிகள்)

* மேல்நாட்டு மரக்கறி வகைகள்

* கிழக்கு பயிர்களில் உருளைக் கிழங்கு, வற்றாளை கிழங்கு

# சூரியனால் ஒளிரும் நிலவுகள்

அவிரியின்
சிறுகதை



சம்மாந்துறை மஷூறா.

புயல்போல வந்தான். டீபோய் மீதிருந்த கண்ணாடிக் குவளையைத் தூக்கிப் போட்டு உடைத்தான். முருங் கையிலையை துப்பரவு செய்து கொண்டிருந்த அதீபாவின் கைகளில் உடைந்த கண்ணாடிச் சில்லுப் பட்டு இரத்தம் துளிர்த்தது அவள் எதுவும் பேசவில்லை. அவளது தாய் கண் ணைக் கசக்கிக் கொண்டு சமையல றைக்குள் ஓடினாள். தந்தையும் அவள் பின்னால் சென்றார்.

நல்லாப் புள்ளப் பெத்து வளர்த்து வெச்சிரிக்காக... புருஷனுக் குத் தெரியாம என்னெல்லாம் பண் றாளோ....

எவரும் வாய் திறக்கவில்லை. கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். ஒன் றரை வயது மகள் மர்யம் கட்டில் மூலைக்குள் பதுங்கிக் கொண்டாள்.

ஒன்னப்போல ஒரு கேடுகெட்ட பொம்புளய நான் காணல்லடி... வாயத் தொறக்காம எப்பிடித் திமிரா நிக்காள்... ச்சைக்.. வாயத் தொறந்தாலும் குத்தம். தொறக்காட்டியும் குத்தம். நான் என்ன தான் செய்றது வாயாடி கதைக்காய்...

ம்....வாய் கதைக்கியா...?

மிருகம்போல் பாய்ந்து வந்து அவள் கழுத்தை மடக்கி முதுகில் ஓங்கிக் குத்தினான்.

என்ட அல்லாஹ்வே... என்ட புள்ள நெறமாதப் புள்ளத்தாச்சி... என்ன வேல இது....?

அதீபாவின் தாய் அலறினாள். தந்தை தடுத்தார். குழந்தை வெளியே ஓடியது. களேபரம் கேட்டு சாச்சியும் பிள்ளைகளும் வந்தனர்.

என்ன புள்ள நடக்குது...? அக் கம் பக்கத்துச்சனம் புதினமில்லவா பார்க்கும். என்ன பெரச்சின புள்ள?

எனக்கெண்டா தெரியா சாச்சி... அவரத்தான் கேளுங்க....

என்னாம்பி என்ன நடந்த?

எனக்கித் தெரியாம இவள் குரு செத கடன் எடுத்திருக்காள்...

அதுக்கா இவ்வளவு பெரச்சின? அவட சமபளம் அவ எடுத்திரிக்கா... அவ கட்டுவாதானே என்றவாறு சாச்சா வும் வந்தார்.

ஓஹோ... அப்போ ஓங்களுக் கெல்லாம் தெரியும். எனக்கி மட்டும் தான் தெரியா என...?

வேலிக்கட்டையிலிருந்த பூவர சங்கிளையை ஒடித்து அவளை விளாச

☞ 16

முற்பட்டான். சாச்சாவும வாப்பாவும் அவனைப் பிடித்துக் கொண்டனர்.

ச்சைக்... என்ன மனுஷன் நீயி? நிறைமாதப் புள்ளத்தாச்சி எண்டும் பார்க்காம....?

இப்ப இவ புள்ள பெத்துக்க லன்னு ஆர் அழுதது? ஏற்னவே ஒரு பொட்டக் களுதையப் பெத்து வச்சிட்டு இன்னொரு பொட்டயச் சுமக்கிறாள். என்ன நீங்க கதைக்கிற.. ஒரு பொட்டக் கழுதைக்கிதானே நீங்களும்பொறந்த?

பொத்துடி வாய... ஒரு லட்சம் குருசெத கடன் எடுத்திரிககாய் எதுக் குடி எடுத்த.. எங்கடி.அந்தக்காசு?

அது என்ட தேவைக்கிதான் எடுத்தன்.

எனக்கித் தெரியாம அப்பிடி ஒனக்கு என்ன தேவடி?

என்ட உம்மா வாப்பா எனக்கி இருபத்தொரு பவுண் தந்தாங்க. உங் கட இஷ்டத்துக்கு வித்துச் சுட்டு நால ரப் பவுண்தான் மிச்சமே. அதுவும் வங் கியில. வெறுங்காதோட கழுத்தோட மூளியாக் கெடக்கன்.... ஒரு....

அதுக்காக நகை வாங்க எடுத் தீங்களோ?

இல்ல. திரும்ப விததுத் திம் பீங்க... என்ட பெற் காட்டும் உங்க கையோட... என்ட தேவைக்கி ஒங்கட கைய எதிர்பார்க்கிற நெலம... எனக்கு காசு தேவையெண்டா வேற வழி...? வாப்பாக்கு பைபாஸ் செய்ய காசு வேணும்...

ஏன்... ஒண்ட நாநா செத்துப் பெய்த்தானா?

அவரால தனிய ஏலா. ரெண்டு பேரும் சேர்ந்துதான் செய்யப் போறம்.

என்னக் கேட்டிருக்கணும்டி... எங்க வாப்பாக்கும் பைபாஸ் செய்யத் தானிரிக்கி... அந்த காசத் தா

அத தரமாட்டன். என்ட சம்ப ளம் ஒங்களோடதானே? சீட்டெல்லாம் கட்டினீங்க... அதில செய்ங்க...

இங்கப்பாரு.... என்ட கோபத் தக் கௌறாத... அந்தக் காசத் தா. இல்ல... நீ அடி வாங்கியே செத்துப் போய்ருவாய்டி...

டேய் எம்புள்ள மேல கை வெய்டா பார்ப்பம். ஒண்ட கை இரிக் காது......

கர்ச்சித்தார் சாச்சா.

புள்ள அதீபா.... இந்தப் பேய னுக்கிட்ட நீ அடி வாங்கினது போதும்... அவன வெளியிறக்கு....

ஒத்தூதினாள் சாச்சி.

தங்கச்சி... என்ன கதைக்காய் நீ? கையில ஒண்டு வவுத்துல ஒண்டு....

பேயக்கதை கதைக்காத ராத்தா... தெனம் தெனம் இந்தப்புள்ள அடி.வாங்கி மாயுது... ஒண்ட பெத்த மனம் பதறல்லியா? அவள்ற சம்பளமா வது மிஞ்சும் புள்ளயள வளர்க்க....

இஞ்ச... ரெண்டு பேரும் வெளி யெறங்குங்க... எம்பொண்டாட்டிய நான் அடிப்பன் உதைப்பன் என்னவும் செய் வன்...

சாச்சா சாச்சி என்னத் தூக்கி. வளர்த் தவங்க. அவங்கள வரவாணாம்கற உரிம உஙகளுக்கில்ல...

வாயா கதைக்காய்... பல்ல உடப்பன்....

அவளை அடிப்பதற்கு கையை ஓங்கினான். அவள் அவனது கையைத் தடுத்து இறுக்கிப் பிடித்துக் கொண் டாள்.

எனனடி.... திருப்பி அடிக்கப் போறியா?

அது ஏலாம இல்லங்க... ஆனா செய்யமாட்டன். ஏனென்டா என்ட உம்மா அப்பிடி வளர்க்கல்ல....

இருடி உன்ன வந்து கவனிக் கன் கோபத்தோடு வெளியறினான். திரும்பி வரும்போது சுனாமியாக வரு வான் என்பதை எண்ணி. கலங்கினாள் அதீபா.

குழந்தை மர்யத்தோடு உள் நுழைந்தார் முன்வீட்டுக்காரர் புள்ள நடு ரோட்டில தனிய நிண்டது. வீட் டுக்கு வர பயப்புட்டிச்சு. வீட்டதான் வச் சிருந்தன். உங்க வீட்டுக்காரரு வெளி யிறங்கிறத கண்டுதான் கூட்டியாந் தன்மா.

மிச்சம் நன்றி அங்கிள். உம்மா புள்ளய பார்த்துக்கங்க. கொஞ்சம் ரெஸ்ற் எடுக்கப் போறன்மா. முடியல..

வந்தானெண்டா அவன் கைதானே பேசும். என்ட ரூம்ல படுங்க மகள்.

அவள் உம்மாவின் அறைக் குள் சுருண்டு கொண்டாள். அவள் வாழ்வு பற்றி அவளது தந்தை தவறாக முடிவெடுத்த அந்தக் கரி நாள் ஞாப கித்தது சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியாக அன்று வருகை தந்திருந்தார் புரோக்கர் அங்கிள்.

சாச்சா நல்லதொரு மாப்புள வந்திரிக்கி... வாட்டசாட்டமான பையன். சவூதில ரைவர்ல வேல.... சம்பளம்கூட்டி. அள்ளுறான். புள்ள ரீச் சர் வேலய உட்டுட்டு சவூதிபோய் மகாராணியா வாழலாம். அழகான பொண் வேணுமாம். காசுதான்கேட் பாங்க. மற்ற எல்லாம் பொருட்டில்ல.

அதார்டாம்பி... உம்மா வாப்பா சகோதரங்களிருக்கா... என புள்ளக்கி இனசனம் வேணும்.

அதெல்லாமே இருக்கு சாச்சா. இந்தா பாருங்க மாப்பிளட புகைப் படம்.... புள்ளய கூப்பிட்டு விருப்பம் கேட்கிறது நல்லம்....

அவ என்ன பார்க்கிறது.... கழுத்த நீட்டச் சொன்னா நீட்டிட்டுப் போறா...

புடிவாதம் புடிக்காம கொஞ்சம் ஆராஞ்சி பாருங்க. பின்னுக்கு சிக்கலா கப்படா... எனக்கென்னமோ போட் டோவ பாரத்தா குருடனுக்கு கண்ணாடி போட்டமாதிரியிரிக்கி.

இஞ்சப்பார் ம.ஃமூதா.... இந்த ஊட்டில பொம்புள முடிவெடுக்கப் படா... மறா தெரியும்தானே. தம்பியேய் நீ. பேசி முடி... ஊரு எதுடாம்பி?

மாவடிச் சேனை சாச்சா. அஞ்சு லட்சம் எதிர்பார்க்காக சாச்சா...

அஞ்சு லெச்சமா.... இதென்ன டாப்பா... ? அவனே மாசம் பத்து லெச் சத்துக்கு கொறயாம சம்பளம் அள்ளு றான்........

சரி சரி புரட்டித் தாறன்.... பொண் பார்க்க வரச்சொல்லு...

எனக்கென்னமோ சரியாப் படல்ல... மாசம் பத்துலட்சம் சம்பளம் எடுக்கிறவனுக்கு அஞ்சு லெச்சம் பிச் சக் காசு எதுக்கு? கோடிக்கணக்கில தானே கேக்கணும்...

இடைமறித்தாள் உம்மா.

நான் செல்லிட்டன். பொறகு பல்லுப் பறக்கும். இதெல்லாம் பொம்பு ளயள் எடுக்கிற முடிவில்ல.....

எண்ட உள்ளதும் ஒரு ஈரல் கொழுந்து... கொஞ்சம் விசாரிச்சா கொறைஞ்சா போய்ருவீங்க...

உம்மா கண்ணைக் கசக்கி னாள்.

டேய் தம்பி அவள் செல்றாப் பல எண்ட உள்ளதும் ஒரு குலக் கொழுந்து. ஏதாச்சும் பொய் புரட்டு இரிந்திச்சோ.... நான் மனுசனா இரிக்க மாட்டன்...

இல்ல சாச்சா. எனக்கி அவ கள நல்லாத் தெரியும்...

அநியாயம் செஞ்சியோ. ஒண்ட கண் அவிஞ்சி பெய்திரும்...

அதீபாவின் உம்மாவின் உதட்டில் வாப்பா எடுத்து வீசிய சில்வர் டம்ளர் பட்டு இரத்தம் கசிந்தது. உம்மா அழுது கொண்டே நகர்ந்தாள்.

தந்தையின் இடுவம்பில் நடந்து முடிந்தது கல்யாணம். கடிகாரத்தில் நேரம் பார்க்கக்கூட அவனுக்குத் தெரி யவில்லை. எழுத வாசிக்கத் தெரியாத உம்மியாக இருந்தான். காட்டுவாசி யாக தெரிந்தான். அன்றே மனம் மர ணித்துப் போனாள் அதீபா. குரங்கின் கை பூமாலையானாள். நரக வாழ்வி லும் ஒளிக்கீற்றாக மர்யம் பிறந்தாள். பெண் குழந்தை பிறந்ததில் அதிருப்தி காட்டினான். திருமணத்தின் பின் வீட் டோடு இருந்தான். அதீபாவின் பெற் கார்ட் அவனது சொத்தானது .நகை களை அடவு வைத்தான். விற்றான். ஊர் சுற்றும் மைனரானான்.தன் கைச் செலவிற்காக தந்தையிடம் கையேந்தி நின்றாள் அதீபா.

ஏதோ உடையும் சத்தம் கேட்டு வாரிச்சுருட்டி எழுந்தாள் .வெளியே வந்தாள்.

சரி... குருசெதய நீயே வெச் சிக்க. பின் வளவில ஒரு பாதிய விற்று காசு தா. எங்க வாப்பாக்கும் பைபாஸ் செய்யணும்.

ஓங்கட உம்மா ஆறு புள்ளயள் பெத்திருக்கா. நீங்க மொத்த செலவில ஆறில ஒரு பங்க போட்டா போதும்.

ஒனக்கு இப்ப வரவர திமிர் அதிகம்டி... பொறக்கப போறதும் பொட்ட. ரெண்டையும் வச்சிக்கி வாழ ஏலுமா? என்ன அனுசரிச்சிப் போக லாட்டி வாழாவெட்டிதான்...

அல்ஹம்துலில்லாஹ். இப்ப மட்டும் என்ன வாழ்ந்துக்கிட்டா இரிக் கன்........? அவமானப்பட்டு அடிபட்டு



☞ 19

எனக்கொரு வாழ்க்க தேவல.... என்னையும் என்ட சம்பளத்தையும் மட்டும் ஆள புருஷன் எதுக்கு................?

அளது உயர்ந்த குரல் கேட்டு அனைவரும் ஓடி வரவும் கையிலகப்பட்டு அவளுக்கு விட்டெறிந்த பூஞ்சாடி அவள் வயிற்றில் விழவும் சரியாயிருந்தது. அவள் வயிற்றைப பிடித்துக் கொண்டு கீழே விழுந்து துடித்தாள்.

என்னடா... நீ மனுசனா மிருகமா..? நிறைமாத புள்ளத்தாச்சி என்டும் பாராம...சோம்பேறி நாயே...

ஒழுக்கமாப் பேசுங்க... அடுத்தும் பொட்ட.... ஆரு கேட்ட? தொலையட்டும்..... என்றான் ஈவிரக்கமின்றி.

தம்பி... அவனப் பொறகு பார்க்கலாம். ஓட்டோவ எடுப்பிங்க.... என அவசரப்படுத்தினார் தந்தை. துடி துடித்து அடங்கி மூர்ச்சையாகிப் போயிருந்தாள் அதீபா. உம்மா ஒப்பாரி வைத்தாள். சாச்சி நீர் கொண்டு வந்து தெளித்ததும் கண் விழித்தாள். ஓட்டோவும் வந்தாயிற்று.

ஓட்டோவில் ஏறத் தயக்கம் காட்டினாள் அதீபா....

என்ன மகள்.... ஆஸ்பத்திரிக்கிப் போயாகணும்....

வாப்பா..... முதல்ல அவர வெளியிறக்கி வீட்டப்பூட்டி திறப்ப கையிலெடுங்க. இனி எப்பவும் அவர் என்ட முகத்தில முழிக்கப்படா...

எப்பிடி.... அவனோட போராடிட்டிரிக்கிற நேரமா இது...

பொறுங்க மச்சான். இந்தா வெளியிறக்குறன்...

சாச்சா யாருக்கோ போன் போட்டார்... பின் அவனுக்கு கோல் வந்தது. பதட்டமானான்.

என்னது... ஜெமீல் ஆஸ்பத்திரிலயா... இந்தா வாறன்.....

சேர்ட்டை கொழுவிக்கொண்டு அவசர அவசரமாக வெளியேறினான். சாச்சி வீட்டைப் பூட்டி திறப்பை கொண்டு வந்தார். அதீபாவை ஓட்டோவுக்கு நடத்தினர்.

யா அல்லாஹ்.... என்ட புள்ளயக் காப்பாத்து. கீழ தரையப் பாருங்க... ரத்தப்போக்கு வந்திரிக்கி...

ராத்தா பதறாதங்க... எல்லாம் சரியாய்ரும்....

பொம்புளயள் ரெண்டுபேரும் ஓட்டோல கூட போங்க. நாங்க புள்ளய பக்கத்தூட்டில விட்டுட்டு பின்னால பைக்ல வாறம்...

பெண்களின் வாழ்க்கைல மட்டும் ஏன் தங்கச்சி இவ்வளவு சோதன... கல்யாண வாழ்க்க எவ்வளவு சோதனையா நரகமாப் போய்டுது...

ஏன் ராத்தா... உங்க கணவரும் என் கணவரும் அப்பிடியா... அவங்க உலகமே நாமதானே.... அதமறந்துட்டு பேசுறீங்க....? இந்த கேடுகெட்டதுகள் ஆணுக்குள்ளயும் கெடக்கு பெண்ணுக்குள்ளயும் கெடக்கு.... இப்ப நமக்கு நம்ம புள்ளட பிரச்சின முக்கியம். தம்பி கொஞ்சம் வேகமாப் போங்களன் வாப்பா.....

# An overlooked blessing...!

You are bowl
That no one can fill
A history
That none can compile

You're our vision
And a virtue
That has arisen
for all

Invisibly burning
Aromatic camphor
You are
And a lullaby
That is sung inaudibly

As a cross
You carry us
Forever
We're indebted
To you ever

To live for us
To be concerned about us
To race for us
To earn for us
To serve us
Willingly,
There is a soul
For us all
We call him dad

A blessing and grace
Overlooked till late
In our life...

Translated by:
Mareena Ilyas Shafee
Tamil poem by:
Ramzana Sameel
(1st draft)

# கண்டுகொள்ளத் தவறிய வரம்...!

நீங்கள்
யாராலும் நிரப்ப முடியாத பாத்திரம்
யாராலும் எழுதி முடியாத சரித்திரம்
நீங்கள்
எமக்காக திறந்திருக்கும் நேத்திரம்
எல்லோர்க்கும் பொதுவான சாத்திரம்

கண்ணுக்கு விளங்காமல் எரியும்
கற்பூரம்
காதுக்கு கேட்காமல் ஒலிக்கும்
தாலாட்டு

எங்களை சுமக்கின்றீர்
வாழ்நாள் சிலுவையாய்
இறுக்க முடியாதிருக்கிறது
உமது கடன் நிலுவையாய்

எமக்காக வாழ
எமக்காக வாட
எமக்காக ஓட
எமக்காகத் தேட
வலிந்து கடமையேற்ற
வரமே எம் தந்தை
நாம் தந்தையானால் தான்
உணரும் இதை சிந்தை.



**- றம்ஸானா ஸமீல் -**

# ஹைக்கூ கவிதைகள்

1.
மறைத்து மறைத்தே
இழுத்துச் செல்கின்றன எறும்புகள்
தம் நிழலை.

2
ஓடுகின்ற நீரில்
ஒற்றைக் காலில் நிற்கிறது
மீனவனின் கொடிக்கம்பு.

3.
கண்ணாடிக்குள் பார்க்கையில்
பின்னோக்கியே ஓடுகின்றது
நான் பயணித்த பேருந்து.

4.
பனிபடர்ந்த காலை
தொட்டதும் அழுகின்றன
ரோஜா மலர்கள்.

5.
ஒன்றையொன்று
துரத்திச் செல்கின்றன
மேகக் கூட்டங்கள்.

6.
கொத்தாக மாம்பூக்கள்
நின்று படமெடுத்துக் கொள்கின்றன
விழித்திரைகள்.

7.
பூஞ்செடி அருகில்
விலகாமல் நிற்கின்றது
பூக்களின் வாசனை.

8.
ஆற்றோர மரக்கிளையில்
அமர்ந்து இளைப்பாறுகின்றது
பௌர்ணமி நிலவு.

9.
துளிர்த்த மரக்கிளையை
வெட்டிவிட எத்தனிக்கிறதோ
மூன்றாம் பிறை.

10.
முற்றத்து மலர்கள்
பார்த்ததும் மலர்கின்றது
மங்கையின் வதனம்.




**மணிக்கூ கவி,**
**கலாநிதி**
**செய்னுலாப்தீன் நஸீரா,**
**ஏறாவு'ர்,**

அலசல் சமூகச் சித்திரம்

# பிரார்த்தனை



ஜெஸ்மின் றமீஸ்
காத்தான்குடி

அப்துல்லாஹ்: உம்மா... உம்மா.... அதிச்சுப் போத்து.... அதிச்சுப் போத்து....

ஆ.....

பாஹிமா: அப்துல்லாஹ் என்ன மகன்? ஏன் அழுறீங்க?

அப்துல்லாஹ்: அதிச்சுப் போத்து அதிச்சுப் போத்து

பாஹிமா: அடிச்சாங்களா? யாரு?

அப்துல்லாஹ்: அந்த... அந்த...

பாஹிமா: அங்கயா? எங்க?
அப்துல்லாஹ்: வாந்த வாந்த காத்து தன்

பாஹிமா: எங்கே காட்டுங்க. யாரு அடிச்ச உங்கள?

ஸமீறா: பாஹிமா... பாஹிமா...

பாஹிமா: ஸமீறா ராத்தா வாங்களன்

ஸமீறா: என்ன பாஹிமா... உனக்கு எத்தன தரம் சொல்லுறது....

அப்துல்லாவ வெளிய விடாத என்டு. பக்கத்து வீட்டு சிமாக் வந்து அப்துல்லாக்கு நல்லா அடிச்சுப் போட்டான். புள்ளட கையக் கொஞ்சம் பாரு.

பாஹிமா: ஆ... அல்லாஹ் இப்படி வீங்கி போயிட்டு. என்ன நடந்த மகன்? என்ட புள்ளைக்கு என்ன நடந்த என்டு சொல்லையா தெரியும்? அல்லாஹ்....

ஸமீறா: கிரிக்கெட் பெட்டால அடிச்சு போட்டான் புள்ள. நோவுக்கு ஏதாவது பாம் பூசி விடு. இல்லாட்டி சுடு தண்ணி ஒத்தடம் கொடு.

பாஹிமா: வாங்க மகன் கைய காட்டுங்க...

அப்துல்லாஹ்: ஆ... ஆ... நோதுது நோதுது...

பாஹிமா: என்ட புள்ள வாயில்லாப் பூச்சி. அவருக்கு பத்து வயசாகுது. ஆனா ரெண்டு மூணு வயசு புள்ளகள்ட புத்தி தான் இருக்கு. அவர விட சின்ன வயசு புள்ளகள் எல்லாம் அவருக்கு அடிச்சு வைக்கிறாங்க. என்ன செய்யிறது இவர்ட தலையெழுத்து இப்புடி இருக்கு.

ஸமீறா: புள்ள, நம்மட கஷ்டம் நம்மளோட. நீ அப்துல்லாவ வெளிய எல்லாம் விடாத. இந்தக் காலத்து புள்ளைகள் எல்லாம் ஒரு மாதிரி. அப்துல்லா போல புள்ளைகள கண்டா கிண்டல் கேலி பண்றது, அடிச்சு வைக்கிறது, பேசுறத பழிச்சு காட்டுறது இப்படி எல்லாம் செய்யிதுகள். நம்மட புள்ளைய நாம தான் கண்காணிப்புல வச்சுக்கணும். இனி புள்ளைய நீ வெளிய எல்லாம் அனுப்ப வாணா.



☞ 23

பாஹிமா: ஓ... ராத்தா... நானும் அப்பு டித்தான் புள்ளய வெளிய விடாம வீட் டுக்குள்ளயே வச்சிட்டு இருந்தன். ஓட்டி சம் இருக்கிற பிள்ளைகள வீட்டுக் குள்ள வெச்சிருக்கக் கூடாது வெளி யில விடுங்க.மத்த பிள்ளைகளோட சேர்ந்து விளையாட விடுங்க என்று டொக்டர் சொன்னதால தான் வெளிய விளையாட விட்டன். ஆரம்பத்துல வெளிய விடாம வீட்டுக்குள்ள வெச்சி ருந்ததாலதான் இவருட நிலம ரொம்ப மோசமாப் போச்சு. வெளியில மத்தப் பிள்ளைகளோட சேர்ந்து விளையாட விட்ட பிறகு தான் கொஞ்சம் கொஞ்சம் பேசுறாரு. பீச்சுக்கு போய் கடற்கரை மண்ணுல நடக்க விட்ட பிறகு தான் நல்லா நடக்கிறாரு. ஆனா போற இட மெல்லாம் அவருக்கு சோதனையா தான் இருக்கு. இவர விட சின்ன வயசு பிள்ளைகள் கூட இவருக்கு அடிச்சு வைக்கிறாங்க. இவர் பேசுறத பழித்து காட்டுறாங்க நக்கல் நையாண்டி பண் ணுறாங்க. மகனாருக்கு இதையெல் லாம் சொல்ல கூட தெரியாது அவரை சுத்தி நடக்குற பாதி விஷயத்தை அவ ரால புரிஞ்சிக்கவே முடியாது. நானும் அவரை மத்த புள்ளைகள் மாதிரி மாத்தி எடுக்க முயற்சி பண்ணிட்டுத் தான் இருக்கேன்.

ஸமீறா: ஓட்டிசம் என்டா என்ன புள்ள? அது ஒரு நோயா?

பாஹிமா: இல்ல ராத்தா அது ஒரு நோய் இல்ல. ஓட்டிசம் என்டா மதி இறுக்கம் என்டு சொல்லுவாங்க. மூளை யில ஏற்படுற ஒரு சின்ன குறைபாடு தான் ஓட்டிசம். பிரசவ நேரத்துல பிள் ளைகளுக்கு மூளைக்கு ஒக்ஸிஜன் சப்ளை ஆகுறதுல ஏதாவது தடங்கல் ஏற்பட்டா ஓட்டிசம் ஏற்பட வாய்ப்பு இருக்கு. இல்லாட்டி புள்ள வயித்துல இருக்கும்போது தாய்க்கு தைராய்ட் பிரச்சின அல்லது மன அழுத்தம் இப்படி ஏதும் இருந்தாலும் ஓட்டிசம் ஏற்படுமாம் என்டு எனக்கு டொக்டர் சொன்னாரு.

ஸமீறா: புள்ளைகள் பிறந்ததில இருந்து இப்புடித்தான் இருக்குமா?

பாஹிமா: இல்ல ராத்தா அப்துல்லாஹ் பிறந்து ஒரு ஒண்டரை ரெண்டு வயசு வரைக்கும் மத்த புள்ளைகள் போலத் தான் இருந்தாரு. ரெண்டு வயசு தாண்டி யும் பேசல்ல. நல்லா நடக்கவும் இல்ல. அவர்ட பேர சொல்லி கூப்பிட்டா திரும்பி பாக்க மாட்டாரு. பிள்ளைக ளோட சேர்ந்து விளையாட மாட்டாரு. மத்த புள்ளைகளோட பாக்கும் போது கொஞ்சம் வித்தியாசமா இருப்பாரு. சொல்லிக் கொடுக்கிற விஷயங்கள் பாதி தான் விளங்கும். பாதி விஷயங் கள் விளங்காது.

ஸமீறா: அப்ப இதுக்கு மருந்து மாத்திர ஏதும் இருக்கா புள்ள?

பாஹிமா: மருந்து மாத்திர ஒன்டும் இல்ல. நாம தான் நம்மட புள்ளைய மாத்தி எடுக்கணும். அவங்களுக்கு திரும்பத் திரும்ப விஷயங்கள சொல் லிக் கொடுக்கணும். பேச சொல்லிக் கொடுக்கணும். மத்தவங்களோட நடந் துக்குற முறைகள சொல்லிக் கொடுக் கணும். முக்கியமா வீட்டுக்குள்ள அடச்சி வைக்க கூடாது. வெளிய கூட் டிப் போகணும் மத்த பிள்ளைகளோட சேர்ந்து விளையாட விடணும்.

ஸமீறா: அப்புடியா? ஆனா நம்மட மனி சன தெரியும் தானே... இப்படியான பிள் ளைகளக் கண்டா அத இத பேசு வாங்க. அப்படி இப்படி கதைப்பாங்க.

பாஹிமா: ஓ..ராத்தா அதுக்கு பயந்து தான் நானும் புள்ளைய வெளிய கூட் டிப் போகாம வீட்டுக்குள்ளயே வச்சிருந் தன். வெளிய போய் இருக்கிற நேரம் புள்ளட நடவடிக்கையில வித்தியாசத் தக் கண்டா நம்மள ஒரு மாதிரி கதைப் பாங்க என்டு நினச்சி வெக்கப்பட்டு பயந்து போய் முட்டாள்தனமா யோசிக் காம புள்ளைய வீட்டுக்குள்ளயே வெச் சுட்டு இருந்துட்டன். அது எவ்வளவு பெரிய பிழையான விஷயம் தெரியுமா?

ஸமீறா: பிழையான விஷயமா?

பாஹிமா: ஓ...ராத்தா... வெளிய கூட் டிட்டு போனாத்தான் நம்மட புள்ளை கள் சூழல புரிஞ்சி கொள்ளுவாங்க. சமூகத்தோடு சேர்ந்து வாழ பழகு வாங்க. புது விஷயங்கள கற்றுக் கொள்வாங்க. என்ட புள்ள நடக்க மாட் டாரு என்டு நினச்சி கவலப் பட்டன். இப்ப நல்லா நடக்கிறாரு. பேசமாட் டாரா என்டு கவலப் பட்டன். இப்ப நல்லா பேசுறாரு. இனி அவருக்கு கொஞ்சம் கொஞ்சமா படிப்பு சொல் லிக் கொடுக்கப் போறன். ஓட்டிசம் இருக்கிற புள்ளைகள் படிக்கிற ஸ்கூலுக்கு சேர்த்து விடப் போறன். எனக்கு நம்பிக்கை இருக்கு இன்ஷா அல்லாஹ் என்ட புள்ள ஒரு காலத்தில அல்லாஹ்வுடைய உதவிய கொண்டு இந்த சமுதாயம் திரும்பிப் பார்த்து ஆச்சரியப்படுற ஒரு நிலைமைக்கு வந்து சேருவான் என்டு.....
என்ட பிரார்த்தனையும் அவனுக்காகத் தான்.... என்ட வாழ்நாள் எல்லாம் நான் அவனுக்காக பிரார்த்தித்துக் கொண்டே இருப்பன்.

ஸமீறா: ஓ.... புள்ள அவனுக்காக நானும் துவா செய்யுறன். நீ உன்ட நம் பிக்கையையும் பிரார்த்தனையையும் கைவிட்டுடாத. அப்ப நான் போயிட்டு வாறன்.

பாஹிமா: அல்லாஹ்ட காவல். போயிட்டு வாங்க.

# கிழிந்த கோப்பு...

அலிரியின் சிறுகதை

**நுஸ்ரா லியாகத் அலி - தர்கா நகர்.**

கண்களைக் கசக்கி திறக்கவே விருப்பமற்றிருந்த இமை மடல்களை அகலமாக விரித்துப் பார்த்தாள். அவள் தூங்கிய அறையில் சிறு வெளிச்சம் படர்ந்திருந்தது. "என்ன இது". உடனடியாக சுவரில் மாட்டப்பட்டிருந்த பாதிக்கண்ணாடி உடைந்த கடிகாரத்தை நோட்டமிட்டாள். நேரம் ஐந்து ஐம்பத்தைந்தைக் காட்டிக் கொண்டிருந்தது." அல்லாவே... எப்புடி.. எப்புடி.. தூங்கியிரிக்கன் சீ.."

தன்னைத்தானே நொந்து கொண்டாள். பாதி இரவுவரை தூக்கமின்றி தலையணை மட்டுமே அறிந்த கணங்கள் சொல்லாமலே முன்னால் வந்து நின்றது. பெருமூச்சொன்றை விட்டுவிட்டு தன்னை அணைத்துத் தூங்கிக் கொண்டிருந்த இளைய மகளின் கரங்களை மெதுவாக விலக்கி, அவள் முகத்தை வருடி முத்தங்கொடுத்து விட்டு

"யா அல்லாஹ் இண்டைக்குச் சரி ஏண்ட புள்ளைகளுக்கு கெடச்ச வேண்டிய பணம் கெடச்சிரோனும்.."

மனதுக்குள்ளே பிரார்த்தித்தவளாய், அவசர அவசரமாக தனது வேலைகளுக்குள் மூழ்கிப்போனாள் இளம் தாய் சஹ்னா.

"மகள்... சஹ்னா... சஹ்னா.."

பலகைக்கட்டிலில் பாதி மூடிய போர்வைக்குள் சுருண்டிருந்த சஹ்னாவின் தாயின் வரண்ட குரல்தான் அது. தாயின் இயலாமையை அறிந்து உடனடியாக தாயின் அருகே சென்றாள்.

"மகள்... இண்டைக்காவது கெடச்சுமா மகள்? நீயும் மாப்பிளைய.. பிரிஞ்சு ரெண்டு வருஷமாகுது... ஒனக்கெண்டு ஒரு சகோதரனாலும் வாய்க்கல்ல.. உனக்கென்றிருந்த வாப்பாவும் போய்ச் சேர்ந்துட்டாரு... ஹ்ஹும்... அல்லாதான்.. ஈச்சியான்..."

"உம்மா கெடச்சிரும் உம்மா..." தாழ்ந்த விரக்தியான குரலில் எப்போதும் போல் தாயை சமாதானப்படுத்திவிட்டு சமையலறைப்பக்கம் நகர்ந்தாள் சஹ்னா.

ஒரு முறை சமையலறையைச் சுற்றி நோட்டமிட்டாள். காய்கள் இடும் தட்டு அவளிடம் தன் வெறுமையை சொல்லிக் கொண்டிருந்தது. சில்லறைப் பொருட்கள் இடும் தட்டு சிறு காற்று வந்தாலும் விழுந்து நொறுங்குமளவுக்கு தளர்ந்திருந்தது. திடீரென ஏதோ யோசனை வந்தவள் சின்னவளின் பால்மா பெட்டியைத் திறக்க அப்பாடா என்றிருந்தது அவளுக்கு.

"இண்டைக்கு இது போதும்..."

நாளையை நினைத்திருப்பாள் போலும் திடீரென அவளுடைய பால் போன்ற முகம் சிவக்கத் தொடங்கி

☞ 26

இருந்தது.

"கருமி மனுசன்... எனக்காகவா காசு கேட்டன். தன்ட சொந்தப் பிள்ளைகளுக்காகவென்று சரி இரக்கப்படுறானா... சீ.. அவர்ட.. உம்மா வேற... பொலிஸ்மாதிரி.. முட்டக்கண்ணால... என்ன பார்வ.. பார்த்தா... கலியாணமாம்.. கலியாணம்... பொண் பார்த்து வெச்சீக்காம்..."

"இண்டைக்கு எப்புடியும் புள்ளைகளோடதான் போகோணும். புள்ளைகளப் பார்த்தாவது இரக்கம் வருதாண்டு... பார்க்கோணும்.."

தன் மனதுக்குள்ளே அத்தனை கவலைகளையும் கொட்டித்தீர்த்துக் கொண்டாள். நேரம் எட்டைத் தொட்டுக் கொண்டிருந்தது. அவளுக்கான நேரமாக ஒன்பதை ஒதுக்கியிருந்தார்கள்.

"உம்மா... வாப்பாவ... பார்கப் போறோமா..."

சின்ன மகளின் மழலைக்குரல் அவளை திக்திக்கென படபடக்க வைத்துவிட்டது.

"ம்... ம்... அவசரமா போகோணும்"

எந்தச்சிரிப்புமற்ற அந்தக்குரலுக்குள் இருக்கும் ஆயிரம் வலிகள் அந்தப் பிஞ்சுக்கு விளங்கவா போகிறது.

தன் இரண்டு பிள்ளைகளையும் கையில் பிடித்துக்கொண்டு தாயிடமிருந்து விடைபெற்று நேராக அடுத்த வீட்டுக்குச் சென்றாள்.

"ஸரீனா மாமி... ஸரீனா மாமி..."

"என்னம்மா.. என்ன.. புள்ளைகளோட.. எங்க.. பயணம்.."

காதிக்கோட்டுக்குத்தான்... மாமி.. இந்தப் புள்ளைகளக் கண்டாவது மனசு இரங்குதான்னுதான் பார்கப்போறன்... உம்மாவ கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்க... மாமி"

"என்னடி.. யாரோட. போற.."

"சித்திமாமிய பஸ் ஸ்டேன்டுல நிக்கச் சொல்லியிருக்கிறன்"

பரபரப்போடு சின்னவளை தூக்கி இடுப்பில் வைத்து மூத்தவளை வலக்கையால் பிடித்துக்கொண்டு பேருந்து நிலையம் நோக்கி வேகவேகமாக நடக்கத்தொடங்கினாள் சஹ்ரானா.

காதி நீதிமன்ற மண்டபத்தில் பெருஞ்சலசலப்பு காணப்பட்டுக் கொண்டிருந்தது. ஒருவருக்கொருவர் தமக்கு நடந்த அநியாயங்களை பேசிக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே சிறு சிறு கூட்டம்.

சஹ்ரானா மெதுவாக தன் இரு விழிகளை "டேபள் பேன்" போல் சுழற்றிக்கொண்டிருந்தாள். அவள் விழிகளுக்கு எந்தப்பதிலும் கிடைக்கவில்லை. சோர்வடைந்த அவள் விழிகள் நிலத்தை நோக்கி கண்ணீரை உதிர்த்துக்கொண்டிருந்தன.

நேரம் பத்தும் ஐம்பதைக் காட்டிக்கொண்டிருந்தது. அரக்கப்பரக்க வந்தும் இன்னும் அவளுக்கான முறை வரவில்லை.

இரு பிள்ளைகளும் அழத் தொடங்கியிருந்தார்கள். தனது கைப்

பையை திறந்து தடவிப்பார்த்தாள். அவளுக்கு சுருக்கென்றிருந்தது. ஒரு பிஸ்கட் பக்கேற்றாவது அவள் பையில் இருக்கவில்லை. இருந்த சிறிய தண் ணீர் போத்தலும் தீர்ந்திருந்தது.

“என்ன.. சஹானா.. எப்புடி.. சமாளிக்கப்போற... இங்க.. கிட்ட.. ஒரு கடயாவது இல்ல...”

“ஓ... மாமி... நான்.. இப்புடி லேட்டாகுமெண்டு.. நினைக்கல்ல... அவசரத்துல.. வாங்கிய பிஸ்கட் பக்கெற்றயும் போட மறந்திருக்கன்...”

தொண்டை வற்றிய குரல் அவளின் இயலாமையை காட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தது.

“டேய்... ஒன்ன... ஒட்டுத்தள்ளி யதாண்டா... வந்துட்டான்... பேச..”

சிங்கம் போல் கர்ச்சிக்கும் குர லொன்று மண்டபத்தை அதிரச்செய்து கொண்டிருந்தது. எல்லோர் கவனமும் அந்தக்குரலின் பக்கம் திரும்பியது. பெண்ணின் அண்ணணாகத்தான் இருப் பான். நீண்ட காற்சட்டை அணிந்து கடும் சிவப்பு நிற மேற்சட்டை அணிந்து மிக கம்பீரமாகத்தான் இருந்தான். அவ னுக்கு முன்னே மெலிந்த தோற்றத்தில் நாணிக் குறுகிப்போன ஒருவன் நின்றி ருந்தான். என்ன பிரச்சினையென்று தெளிவாகத் தெரியவுமில்லை அவள் அதனை அறிந்து கொள்ள முனையவு மில்லை. அவள் பிள்ளைகளை சமா ளிப்பதே அவளுக்கு பெரும் போராட்ட மாக இருந்தது.

உம்மா.. வாப்பா.. வாப்பா.. எங் கம்மா...”

“வந்து... வந்துருவாரு...”

“எனக்கு.. சொக்லட்... வேணும்”

“எனக்கு பிஸ்கட் வேணும்”

பிள்ளைகளின் குரல் மாறி மாறிக் கேட்டுக்கொண்டிருந்தது.

“ட்றீங்... ட்றீங்”

காதி நீதவானின் மேசைமேலே குவிக்கப்பட்ட கோப்புக்களின் மத்தி யில் நசுங்கியிருந்த மணியின் குரல் தான் அது.

“சஹானா...! சஹானா...!”

நீதவானின் குரல் கணீரென்று ஒலித்தது. பிள்ளைகளுக்கு எந்தப்பதி லும் சொல்லாமலே பிள்ளைகளை மாமியிடம் ஒப்படைத்துவிட்டு அவர்க ளின் அட்டகாசத்தில் இங்குமங்குமாக பறந்துகொண்டிருந்த இளம் பச்சைநிற மேல்முந்தானையை சரிசெய்து கொண்டே எழுந்து சென்றாள் சஹானா.

நீதவானின் அந்தச் சிறிய அறையின் கதவுகளைத்திறந்து மெது வாக உள் நுழைந்தாள். மேலே பார்த் தாள், சிறிய இரைச்சலோடு மிக வேக மாக சுழன்றுகண்டிருந்தது மின்விசிறி. அந்தக்காற்றில் கோப்புகளுக்குள் ளிருந்த தாள்கள் வெளியேறத் துடித் துக்கொண்டிருப்பதைப்போல் படபடத் துக்கொண்டிருந்தன, இவள் இத யத்தை ஒத்து.

நீதவானோடு சேர்ந்து இன்னும் இருபெண்களும் ஒரு ஆணும் மேசை யைச்சுற்றி அமர்ந்திருந்தார்கள். அவ ளின் கோப்பைத்தான் அவர்கள் பார்த்

துக்கொண்டிருந்தார்கள். போனமாதம் தாயின் கைப்பொம்மை மாதிரியே அடங்கிப்போய் கைகட்டி வாய்பொத்தி தாபரிப்புப்பணத்தின் அளவையாவது சொல்லமுடியாமல் விலகிச்சென்ற அவனின் முகம் அவள் முன்னால் வந்து அவளை நிதானமிழக்கச்செய்து கொண்டிருந்தது. அதேநேரம் பிள்ளைக ளின் கண்ணீர் சிந்தியவதனமும் அவளை உறுத்தி பயமுறுத்திக் கொண்டிருந்தது.

"யா அல்லாஹ்... இந்தமுறை யாவது... நல்லமுடிவு வரவேண்டும்..."

மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டே ஒரு முறை கண்ணை மூடித் திறந்து கொண்டாள். மெதுவாக நீத வானை நோக்கினாள். நீதவான் தன் மூக்குக்கண்ணாடியை சரிசெய்து கொண்டிருந்தார். அவளை ஏறெடுத்துப் பார்த்தார்.

"ம்.. சஹானா.. உங்கட கேஸ.. இண்டைக்கு... விசாரிக்க ஏலாது... உங்கட பிள்ளைகளின் வாப்பாக்கு ஏதோ முக்கியமான வேலையெண்டு அறிவிச்சிருந்தாரு... அதனால ஒண்டும் செய்யேலாது... ம்.. அடுத்த மாசம் இரு பத்திநான்காம் திகதி பத்து மணிக்கு வாங்க... "

"க்றிக்.."

அங்கே, தளர்வுற்றிருந்த கோப் பொன்றைக் கிழித்துக்கொண்டு படப டக்கும் மெல்லிய சப்தத்தோடு வாசலை நோக்கி பறந்துகொண்டிருந் தது ஒற்றைத்தாளொன்று.

# வேதனைப் பெருவெளி

களைந்த வேராய் விழுந்தோம்.
சமுதாயக் கொடுமைகள் சூழும் வெளியில்.
நீதி, நியாயம் தொலைந்ததொரு தேசம்.
அநீதிகள் அரங்கேறும் கூடம்.

சிறுமைப்படுத்தப்படும் மானுடம்,
உரிமைகள் மறுக்கப்படும் அவலம்.
வறுமைக் கொடுமை வாட்டும் தேசம்.
அநீதிகள் அரங்கேறும் கூடம்.

அடுக்கடுக்காய் அடுக்கப்படும் அக்கிரமங்கள்.
அமைதியாய் வேடிக்கை பார்க்கும்
அவலம்.
ஒடுக்கு முனறகள் தாண்டவமாடும் பூமி,
விடுதலைக்காக ஏங்கும் இதயம்.

ஆனால் நம்பிக்கை மட்டும்
அழியவில்லை.
சமூக மாற்றத்திக்கான வேட்கை
குறையவில்லை.
புதிய விடியலுக்கான போராட்டம்
தொடரும்.
சமூக நீதிக்கான குரல் ஒங்கி ஒலிக்கும்..

**நஸ்றீனா பதுார்தீன். - குருநாகல**



# இரவு

இரவு என்பது சிலருக்கு
அயர்ந்து தூங்கும் நித்திரை மேடை.
இன்னும் சிலருக்கு இரவு
இயற்கையை இரசிக்கும் இரசனை மேடை.

இன்னும் சிலருக்கு
தனிமையை போக்கும் துணை மேடை.
இன்னும் சிலருக்கு
தன் முகமூடிகளை களையும் ரகசிய மேடை.

இன்னும் சிலருக்கு
புதிய வேஷங்களை அணியும் நாடக மேடை.
இன்னும் சிலருக்கு
மறைமுக உதவிகள் புரியும் உன்னத மேடை.

இன்னும் சிலருக்கு
அறிவை தேடும் ஞான மேடை.
இன்னும் சிலருக்கு
தன் உணர்வுகளை களையெடுக்கும் தியாக மேடை.

இன்னும் சிலருக்கு
தன் முகவரி தேடும் பயண மேடை.
இன்னும் சிலருக்கு
தன் வாழ்வை ஆரம்பிக்கும் முதல் மேடை.

இன்னும் சிலருக்கு
உலகை பிரியும் மரண மேடை.
இரவு யாவருக்கும் ஒன்றல்ல.
இரவு ஒவ்வொருவருக்கும்
வெவ்வேறு மேடையாகிறது.

**அகீலா ஜவுபர்**
**ஏத்தாளை புத்தளம்**



# இவ்விதழின் ஆளுமை

***செவ்வி கண்டவர் – ஷாமென் நிஸாம்டீன்***
***கட்டுகஸ்தோட்டை***






இவ்விதழின் ஆளுமை பல சமூக சேவை அமைப்புகளின் அங்க வகிப்ப வரும் பெண்களுக்கான சுய தொழில் பயிற்சி அளிப்பவரும் பெண்கள் லயன்ஸ் கழக உறுப்பினருமான திரு மதி. தேசாபிமானி சேவா புஷன தர்ம துத சில்மியா ஷஹாப்டீன் உடனான நேர்காணல்

கேள்வி:1

அஸ்ஸலாமு அலைக்கும், அவரி சஞ் சிகையின் ஆளுமை பகுதியில் உங் களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. உங்கள் ஆரம்பகால கல்வி பற்றிய விடயங்களை கூறுங்கள்?

பதில்

:வஅலைக்குமுஸ்ஸலாம், நான் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவள். கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். எனது பெற்றோர் ஆசிரியர்களின் வழிகாட்டல் மூலம் இந்நிலைமைக்கு வந்தேன். தரம் நான்கிலிருந்து தையல் போன்ற கைத்தொழில் பயிற்சிகளை பெற்றுக் கொண்டுள்ளேன்.அத்தோடு பல்லின மாணவர்களோடு நல்லிணக்கத்துடன் பழகும் வாய்ப்பு பாடசாலையில் நிறைய கிடைத்ததனால் இன ஒற்றுமை பற்றிய விழிப்புணர்ச்சியை பெறவும் பிற இன மக்களோடு நல்லிணக்கத்தோடு வாழக் கற்றுக் கற்றுக்கொண்டேன்.

கேள்வி:2

பல சமூக சேவை அமைப்புகளில் அங் கம் வகிக்கும் நீங்கள் பெண்களுக்கு குரல் கொடுப்பவராக உள்ளீர்கள். இத் துறைக்கு எவ்வாறு வந்தீர்கள்?

பதில்:




2006 ஆம் ஆண்டு தையல் டிப்ளோமோ பட்டத்தை பெற்றேன். 2012ல் பெண்கள் வர்த்தக சங்கம் கண்டி, 2014இல் கண்டி சர்வமத குழுவில் (தேசிய சமாதான பேரவை) இணைந்து கொண்டேன். இதன் மூலம் பல்வேறு பயிற்சிகளை பெற்றுக்கொண்டேன். இந்த பயிற்சிகளின் மூலம் எனது ஊரில் உள்ள மூவின பெண்களுக்கும் இலவசமாக சுய தொழில்களை கற்றுக் கொள்ள வாய்ப்பளித்தேன். உதாரணமாக தையல் பயிற்சி, பழக்கூழ் தயாரித்தல், கோழி வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், செருப்பு உருவாக்குதல் போன்ற பல்வேறு சுய தொழில் பயிற்சிகளை அளித்து இத்தொழிலை எவ்வாறு வியாபார அபிவிருத்தியாக மாற்றுவது என்பது பற்றியும் தொழில் வர்த்தகர்களோடு சேர்ந்து இலவசமாகவே பயிற்றுவித்தேன்.. இதற்கு எனக்கு அனுசரணையாக கண்டி பெண்கள் வர்த்தக சங்க இணைப்பாளர் திரு. சாயக்காரர் இருந்தார். எங்கள் ஊரில் இருந்த பன்சில தேரர் அவர்கள் பெரும் உதவி செய்தார் என்பது மறக்க இயலாது ஒன்றாகும்.

துருளிய என்ற பெண்கள் மகளிர் சங்கம் ஒன்றை அமைத்து, அதன் தலைவியாக கடமையாற்றினேன். இதன் மூலம் பிரதேச செயலகத்துடன் இணைந்து தையல் மற்றும் வேறு தொழில் பயிற்சிகளையும் வழங்கி தேவையான தையல் இயந்திரங்களையும் பெற்றுக் கொடுத்தேன். இந்த சங்கத்தின் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு வருட இறுதியில் பாடசாலை உபகரணங்களை வழங்கினோம். மகளிர் தின விழா, சிறுவர் தின விழா, மற்றும் பல வகையான விழாக்களும் நடத்தப்பட்டன.

கண்டி பல்லேகல்லயில் சிறுவர், சிறுமியர் 100 பேரை இணைத்து சிறுவர் மன்றம் ஒன்றை ஆரம்பித்து பிரதேச செயலகத்தில் பதிவு செய்து, செயலகத்துடன் இணைந்து பல்வேறு வகையான பயிற்சிகள் மற்றும் உதவிகளை நடாத்த முடிந்தது.

பல பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை நடத்தியதுடன் கண்டி மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து பெண்களின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தகுந்த ஆலோசனைகளை வழங்கி அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள வழி காட்டினோம். வலது குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் வழிகாட்டினோம்.

மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் குரல் கொடுத்தோம். பல்வேறு அமைப்புகளில் அங்கத்தவராக இருக்கின்றேன். அதில் **House Wife Association** மற்றும் முஸ்லிம் பெண்கள் அமைப்பு கண்டி ஆகியவற்றில் உறுப்பினராகவும் தற்போது செயல்படுகின்றேன்.

இவ்வாறான நிகழ்ச்சி திட்டங்களை கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம் (சிறுவர் மற்றும் பெண்கள்), பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர், சர்வதமத தலைவர்கள், பல்வேறுபட்ட சமூக சேவை அமைப்புகள் என பலரின் உதவியுடன் செய்து வருகின்றேன்.

கேள்வி:3

பல சமூக சேவை அமைப்புகளில் உள்ள நீங்கள் எவ்வகையான உதவிகளை பெண்களுக்கு செய்திருக்கின்றீர்கள்?

பதில்:

தையல் கலையைப் பயிற்றுவித்ததன் மூலம் தற்போது அவர்கள் வருமானத்தைப் பெறுகின்றார்கள் ஊனமுற்ற, கால் இல்லாத பெண் ஒருவருக்கு செயற்கை கால் பெற்றுக்கொள்ள உதவியதுடன், மனநோயினால் பீடிக்கப்பட்டிருந்த அவருக்கு சிகிச்சைப்பெற உதவி இருக்கின்றேன். வசதியுள்ள 20



பெண்களை சேர்த்து திகனை பெண்கள் அமைப்பொன்றை ஆரம்பித்து அதன் மூலம் பெண்களுக்கு உதவி வருகின்றேன். கண்டி சிறுவர் புற்று நோய் பராமரிப்பு வைத்தியசாலையில் இரட்டை படுக்கைகளையும், 30 மெத்தைகளையும் திரு. ரூமா ஆப்டீன் அவர்களின் அனுசரணையுடன் பெற்றுக்கொள்ள உதவியுள்ளேன். பல அமைப்புகளின் ஊடாக மூக்கு கண்ணாடி பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் மற்றும் கண் புரைக்கான சத்திர சிகிச்சை செய்யவும் உதவமுடிந்தது.

பெண்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்குதல் கல்வியை மேம்படுத்தல் வாழ்வாதாரமற்ற பரிதவிக்கும் பெண்களுக்கு உதவுதல் பெண்கள் உருவாக்கும் பொருட்களை சந்தை படுத்தல் பெண் வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்தல் சாதனை பெண்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்குதல் போன்ற செயற்பாடுகளும் அடங்குகின்றன.

கேள்வி:4

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு (**Special Need Children**) எவ்வகையான முன்னெடுப்புளை செய்கின்றீர்கள்.

பதில்:

அக்குரணையில் விசேட தேவையுடைய பிள்ளைகளைப் பற்றிய ஆராய்ச்சி செய்வதற்கு என்னை மொழி பெயர்ப்பாளராக நியமித்தார்கள். 2012ல் கல்ஹின்னயில் திருமதி. **Rooma Abdeen** அவர்களுடன் விசேட



தேவையுடைய மாணவர்களுக்கான பாடசாலை ஒன்றை அமைத்து இதில் நான் ஆசிரியராகவும் பின்னர் இணைப்பாளராகவும் அதிபராகவும் செயற்பட்டேன். விசேட தேவையுடைய பிள்ளைகள் தங்களின் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ள பயிற்றுவித்தது டன் அவர்கள் வருமானத்தை ஈட்டி கொள்ள சுய தொழில்களை (பணப்பரிமாற்றம், பெயர்பலகை வாசித்தல்) கற்பிக்கவும் கிடைத்தது.

கேள்வி: 5

உங்கள் சேவைக்கு கிடைத்த அங்கீகாரங்கள், அதாவது நீங்கள் பெற்ற விருதுகள், உங்களுக்கு கிடைத்த பட்டங்கள் போன்றவற்றை பகிர்ந்து கொள்ளுங்கள்.

பதில்:

சமாதானம் என்ற நிறுவனத்தினால் திரு. கலாநிதி. முஸம்மில் காதர் அவர்களினால் 2015.11.28-ல் உருவாக்கப்பட்ட **Asian Academy for Good Governance In Randened Recognition of the Great Service Rendered in the**




**Fields of (Women's Empowerment and Social Development) Huony** Title of Ambassador For Justice (Excellent Service) என்ற விருதை முதலாவதாகப் பெற்றுக்கொண்டேன்.

21.01.2017 - மலையக கலை கலாசார சங்கத்தினால் இரத்தினதீபம் என்ற தேசிய கௌரவ பட்டம் வங்கி கௌரவித்தார்கள். மக்கள் நலன் பேணும் மனித நேயமிக்கவர்களை கௌரவிக்கும் முகமாக எனக்கு தேசாபிமானி சமூகதீபம் கௌரவ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

வன்முறை வழியில் முரண்பாடுகளைக் கையாள்வதனூடாக நீதியையும், சமத்துவத்தையும், அஹிம்சை வழி வாழ்க்கை முறையையும் நோக்கிய சமூகத்தை உருவாக்குபவர்களுக்காக வழங்கப்படும் தன்னார்வ தொண்டினை இலங்கை திரு நாட்டில் 25 மாவடங்களிலும் இருபதாயிரத்திற்கும் அதிகமான அஹிம்சை வழி வாழ்க்கை முறை தம் வாழ்வில் இணைந்து மகத்தான சேவையினை வழங்கியதற்கும், கடந்த 10 வருடங்களுக்கு மேலாக என் வாழ்வை அர்ப்பணம் செய்தமைக்காகவும் ஸ்ரீலங்கா அபிமானி அஹிம்சை வழி மக்கள் கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டடேன். 25 மவாட்டங்களில் கண்டி மாவட்டத்திற்கு என்னை தேர்தேடுத்து Peace Ambassador - In Recognition of Exceptional Contribution to Educational, Cultural Arts, Humanity, Social Service, and Religious Service in Peace and Harmony Among All the Communities. Building விருது வழங்கப்பட்டது.

Vanitha Bimana (Central Province) Provincial Competition
2021- 3rd Place Voluntary Service
2022 2nd Place Social Service
2023-2and Place-Social Service
சான்றிதழைப் பெற்றுக்கொண்டேன்.

சர்வதேச பெண்கள் அமைப்பின் உலகளாவிய பெண் ஆளுமைகளின் விழித்

தெழு விருதை 08-04-2024 அன்று பெற்றுக்கொண்டேன். NOBIE SERVICE Award.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவினால் (Lanka Woman Right Enforcement Council) 2022.04.09 அன்று Child & Women's Affair Director Kandy District சான்றிதழ் வழங்கப்பட்டது.

2023.09.09. அன்று தர்ம சக்தி பதனம, எக்ஸத் சாஹயோகிதா பதனம மூலம் பிரஜா பிரசாதனி, சமாஜ சுப சாதன ஜனரன்ஜன ஸ்ரீ திரிய காஹான்தா லங்கா அபிமானி பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.

கேள்வி:6

எமது ஸ்ரீ லங்கா பென் கிளப் மற்றும் அதன் செயல்பாடுகள் பற்றி கணிப்பு எவ்வாறு உள்ளது?

பதில்:

2024 இல் ஸ்ரீ லங்கா பென் கிளப் அமைப்பில் இணைந்துகொண்டேன். அத்தோடு அதில் நடைபெற்ற மகாநாட்டிலும் கலந்து கொண்டேன். மேலும் இவ்வமைப்பு பெண்களின் திறமைகள் அவர்களின் ஆளுமைகளை வெளிகொணர்ந்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. அத்தோடு இவ்வமைப்பின் அங்கத்தவர்களின் ஆக்கங்களைக் கொண்டு வருடந்தோறும் அவரி சஞ்சிகையை வெளியிடுவது மிக மகிழ்ச்சிகரமான விடயமாகும். இலங்கையில் மட்டுமல்ல அயல் நாடுகளில் உள்ள பெண்களும் இவ்வமைப்பில் இணைந்



துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வமைப்பு பெண்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் களம் அமைத்து கொடுத்துள்ளது. ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான ஸ்ரீ லங்கா பென் கிளப் தலைவி திருமதி. மஷூறா சுஹூறுதீன் அவர்களுக்கும் என்னை நேர்காணல் செய்த ஷாமென் நிஸாம் டீன் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பலவேலைப் பழுக்களுக்கு மத்தியிலும் எமது அவரி சஞ்சிகைக்காக உங்கள் பொன்னான நேரத்தை செலவிட்டு பல தகவல்களை தந்துள்ளீர்கள் இத்தகவல்கள் எமது பெண்களுக்கும் உதவும் என நம்புகிறோம் உங்கள் பணியும் சமூக சேவையும் தேவை உடையோருக்கு உதவும் முகமாக அமைய வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு

# ஏழை முகம்.

விருட்சித்த கனவுக்
கூடை சுமந்த
இளமனமொன்று,
நீள் வெளியில்
நீந்திக் கொண்டிருக்கிறது .

களைத்த பயணத்தில்
இளைப்பாறிக் கொள்ள,
இத்தனை சிந்தனை
சிறகொடிந்து ,
அதே இடத்தில்
அமைதி கொள்கிறது .

பரந்த மனம் கொண்டு,
விரிந்த உலகில்,
குன்றிய பார்வையால்
நின்று போனது,
வாழ்வின் மிச்சங்கள்.

அடங்கிப் போன
புன்னகை,
அழுது புலம்பி
அந்தரங்கமாய்
மறைகிறது.


மாற்று வழியின்றி
கால்கள் வேர் பிடித்து ,
செழிக்கிறது
உடைந்த குடிசைக்
கதவருகே .

இனியும் பூக்குமா
இந்த முற்றத்தில் ,
இழந்த புன்னகை,
பேசும் விழிகள்,
விரியாமல் நீள்கிறது.

செழித்த புல்வெளியில்,
தனித்த தறுவாய்,
தலையசைத்துக்
கொள்கிறது ,
பிறந்தது வாழத்தானே
என்று...



**சேஹு மொஹம்மது
பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ.**





முபீதாவின்





ஓவியங்கள்.





# கோள் மூட்டுதல்



ஷியாஸ்னா பைஸல் நாவலப்பிட்டி.

கோள் மூட்டும் வழக்கம் வளர்ந்த பெரியவர்களிடம் மட்டுமல்லா மல் குழந்தைகளிடமும் காணப்படுகின் றது. காரணம் இதை எவரும் எவருக் கும் கற்றுத்தர வேண்டிய அவசிய மில்லை. இது தீய பண்புள்ளவர்களி டம் தானாகவே உருவாகி விடும் ஓர் இழிவான வழக்கமாகும். சிறு குழந்தை களிடம் இது உருவெடுப்பது தான் விந் தையிலும் பெரிய விந்தை. சிறு குழந் தைகள் நன்மை தீமைகளை அறியார். இருப்பினும் ஒரு சிறுவன் மற்றவரைப் பற்றி தாயிடமோ, தந்தையிடமோ, ஆசி ரியரிடமோ கோள் உரைக்கின்றான்.

கோள் உரைப்பதன் நோக்கம் யாது?

கோள் உரைப்பதன் நோக்கம்" பிறரைமனதளவிலோ அல்லது உடல ளவிலோ துன்புறுத்த வேண்டும்" என்ப தேயாகும்.

சரி கோள் என்பது என்ன?

கோள் என்பது உண்மையில் லாத அல்லது மிகச் சிறிய அளவில் உண்மை கலந்த செய்தியாகும். தனக்கு பிடிக்காதவனை அல்லது பிடிக்காதவளைப் பற்றி ஒன்றுக்கு பத் தாக, நூறாகத் திரித்துக் கூறப்படும் செய்தியே கோள். குழந்தைகள் ,ஆண் கள், பெண்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் கோள் மூட்டிகளாகவே இருக்கின்றனர். இன்றைய காலங்க ளில் ஒவ்வொருவரும் தங்களால் இயன்றவரை கோள் உரைக்கின்றனர். மாமியார் மருமகளைப் பற்றி தன் கண வரிடமும், மகனிடமும் கோள் உரைக் கின்றாள். மருமகளோ மாமியாரைப் பற்றி தன் கணவனிடமும் பெற்றோர்க ளிடமும் கோள் உரைக்கின்றாள். மாமி யாராகட்டும், மருமகளாகட்டும் பொது வாக கோள் உரைப்பதை விட்டும் அஞ்சிக் கொள்வீராக. ஏனெனில் அது கொலையிலும் தீய செயலாகும். கோள் உரைப்பவனின் துஆ இறைவ னால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. நபி மூஸா (அலை) அவர்களின் காலத் தில் மழையின்றி ஊரில் பஞ்சம் ஏற்பட் டது. மக்கள் நீரின்றி, உணவின்றி அவ தியுற்றனர். எனவே நபி மூஸா (அலை) தம் கூட்டத்தாரை அழைத்துக்கொண்டு ஒரு பரந்த திடலுக்குச் சென்றார்கள். அங்கு மழை பெய்ய வேண்டி அல் லாஹ்விடம் துஆ இறைஞ்சினார்கள். அப்பொழுது அல்லாஹ் நபி மூஸா (அலை) அவர்களிடம் "மூஸாவே உம் முடைய கூட்டத்தில் கோள் உரைக் கும் ஒருவன் இருக்கின்றான். அவனா லேயே துஆவை நான் ஏற்கவில்லை" என்று கூறினான். அது கேட்ட நபியவர் கள் திடுக்குற்று,

“இறைவா! அவன் எவனென நீ எனக்கு அறிவிப்பாயாக! அவ்வாறு அறிவிப்பின் நான் இங்கிருந்து அவனை அப்புறப்படுத்தி விடுவேன்” என்றார்கள்.

☞ 40

அதற்கு அல்லாஹு தஆலா நாயன்" ஓ மூஸாவே! அவனை நான் அறிவிப்பதன் மூலம் என்னையும் கோள் உரைக்கச் சொல்கிறீரா? " என்று கேட்டான்.

தம் குற்றத்தை உணர்ந்த அவர்கள் தம் கூட்டத்தினர் அனைவரையும் நோக்கி "நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருங்கள்" என்று கூறினார். அவர்களும் பாவ மன்னிப்பு கோரினர். அல்லாஹ்வும் மழையை பொழிவித்தான்.

கோள் சொல்வது மாபாதகச் செயல் என்பது இதிலிருந்து நமக்கு விளங்குகிறதன்றோ?. கோள் சொல்வதால் அன்புள்ளம் கொண்ட இருவர் பிரிந்து போகவும், பகைமை கொள்ளவும் நேரிடுகின்றது. இப்பாவம் கோள் உரைப்பவனைச் சேர்ந்து சீரழிக்கும். கோள் சொல்வதால் கணவனும் மனைவியும் எந்நேரமும் பிணங்கிக் கொள்ளவும், வெறுப்டையவும், பிரிந்து போகவும் நேரிடுகின்றது. இவ்வாறே நீண்ட கால நண்பர்களும், பொறாமை உள்ளம் கொண்ட சில கோள் மூட்டிகளால் பிரிந்து விடுவதுண்டு. அன்பால் இணைந்தவர்களை பிரிப்பது மிகப் பெரிய தீச்செயல் ஆகும்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். "மனிதர்களில் மிகக் கெட்டவர்கள் (எவரெனில்) அன்பானவர்களிடையே கோள்மூட்டி, பிரிவினையை ஏற்படுத்துபவர்களே". "கோள் உரைப்பவன் சுவனம் புகமாட்டான். மண்ணறையின் வேதனையை விட்டும் மீட்சி பெற மாட்டான். என் உம்மத்தில் மிகத் தீயவன் எவனெனில் கோள் சொல்லி முஸ்லிம்களிடையே உறவை அறுப்பவனே!". என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

# புலால் வாசம் நூல் ரசனை குறிப்பு

## ஏ எஸ் சித்தி மிஸ்ரியா அமீன் – கிண்ணியா [14.09.2025]

ஒரு பிரதேசம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது, அல்லது தன்னை வெளிப்படுத்திக் கொள்வது என்பது அப்பிரதேசத்தில் வாழும் ஒரு கலைஞனை கொண்டு என்றால் அது மிகையாகாது.

அப்படியான கலைப்படைப்புகள் நம் சிறந்த வாசிப்பு களுக்காக கிடைக்கும்போது நம் அறிவு விஸ்தீரணமாவதுடன்... நாம் இருக்கும் இடத்தில் இருந்தபடியே பல பிரதேசங்களை சுற்றி வந்துவிடலாம். இலக்கிய கர்த்தாக்களின் சிந்தனை, பல்வேறு அனுபவங்கள் ஆளுமை பண்புகளை அறிந்து கொள்வதோடு... அந்தந்த பிரதேச மக்களின் மொழி வளம், கலாச்சார பண்பாடுகள், அந்த மக்களின் வாழ்க்கை கோலங்கள், அத்தனையையுமே நாம் அறிந்து கொள்ளக்கூடிய சிறந்த வாய்ப்பு நமக்கு கிடைக்கின்றது.

அந்த வகையில் காத்தான்குடியில் நடைபெற்ற எமது "ஸ்ரீலங்கா பென்கிளப்" மூன்றாவது மாநாட்டில் எனக்கு பரிசாக கிடைத்த புத்தகம் ஒன்றையே உங்களுடன் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.

மறைந்த எழுத்தாளர் மர்ஹூம் "சொல்லன்பன்" நஸ்ருதீன் அவர்கள் எழுதிய "புலால் வாசம்" என்ற அருமையான நாவல் பற்றி பார்க்கலாம்.

இந்த நாவல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

கதைக்குள் நுழையும் முன்னே கதாசிரியர் பற்றியும் தெரிந்து கொள்வோமே.

கிழக்கிலங்கை அம்பாறை மாவட்டம் ஒலுவில் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட சொல்லன்பன் நஸ்ருதீன், சிறுவயதிலேயே இலக்கிய தாகம் மிக்கவர்.

இரண்டு தசாப்த்தங்களுக்கு மேலாக இலக்கிய உலகில் பேசப்படும் ஒரு இலக்கிய ஆளுமை.

"சொற்களின் மகுடிக்காரர்" என அப்பகுதி இலக்கியவாதிகளால் அன்பாக அழைக்கப்பட்ட இவர், கவிதை, சிறுகதை, நாட்டுப்புறக் கவி பாடல், பாடலாக்கம், குறும்பட நடிப்பு என பன்முக ஆளுமைகளை கொண்ட சிறந்த கலைஞர்.

ஒலுவில் மின்னல் வெளியீட்டகத்தின் உதவி தலைவராகவும் பிரதம செயல்பாட்டாளர்களுள் ஒருவராகவும் மிக நீண்ட காலமாக இயங்கி வந்தவர்.

இவருடைய "கிணஞ் சொட்டு" எனும் சிறுகதைத் தொகுதியும் முன்னர் வெளிவந்து வாசகர்களின் பாராட்டை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இனி கதைக்குள் நுழையலாம்...

சமூகத்தில் ஆழப் புரையோடிப் போய் கிடக்கும் பிரச்சினைகளை நோக்கிய பார்வையில், அந்த சமூகப் பிரச்சினை களை தெளிவாகவும் ஆழமாகவும், அர்த்தமாகவும் பேசுகின்ற ஒரு நாவல் தான் இந்த "புலால் வாசம்".

ஒரு நாவலில், சாதாரண மனி தர்களை கூட மிக அழகாக காட்டுவ தற்காக அவர்களது உள்ளத்துணர்ச்சி களுக்கு வடிவம் கொடுத்து அந்தக் கதாபாத்திர த்தை உருவாக்க வேண்டும்.

அப்படியாக உருவாக்கப்பட்ட மனதை அகலாத... வாசகர் நெஞ்சில் நிரந்தரமாக குடியிருக்கும் கதா பாத்தி ரம் தான், இக்கதையின் நாயகனும் குடும்பத் தலைவனுமான "செல்லங் காக்கா" எனும் கதாபாத்திரம்.

கிழக்கு மாகாண கடற்கரை பகுதியின் மிக அழகிய வர்ணனை யோடு ஆரம்பமாகும் இந்த நாவலின் கதை, கரையோர குக்கிராம முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரத்தை மிக அழ காக புடம் போட்டு நகர்கின்றது.

மறந்து போன மிக அழகிய கிராமிய சொல்லாடல், இந்த கதை முழுக்க விரவிக் கிடக்கின்றது. கிழக் கிலங்கை முஸ்லிம்களின் பேச்சு வழக்கை கையாள்வது ஆசிரியர் மிகுந்த கவனம் செலுத்தி இருக்கிறார்.

மிக அவதானத்தோடு சம்பவங் கள் கோர்க்கப்பட்டிருப்பதும், வாசிப்பா ளர்களிடையே நிச்சயம் ஈர்ப்பை உண்டு பண்ணி விடும் என்பதில் சந்தே கம் இல்லை.

ஏழை மீன்பிடி தொழிலாளி யான செல்லங்காக்கா, தனது மனைவி அலிமா நாச்சி, தாதியாகப்பணி புரியும் கணவனால் கைவிடப்பட்ட மூத்த மகள் சுலைஹா, அதன் பிறகு இரண்டு ஆண்மக்கள், கஷ்டப்பட்டு படிக்க வைத்து பணக்கார இடத்தில் கல்யா ணம் முடித்து அங்கே குடும்பம் நடத் தும் இளைய மகன், பெண் குழந்தை யாக பிறந்ததால் தந்தையின் பாச பரா மரிப்பின்றி, தனது தாயின் சம்பாத்தி யத்தில் உயர் கல்வி கற்கும் பேத்தி, இன்னொரு பெண்ணை தகாத உறவில் மனைவியாக்கிக் கொண்டு வாழும் மக ளின் கணவனான மருமகன், போன்ற கதாபாத்திரங்களுடன் கரையோர வாழ் வியல் கஷ்டங்கள் இழையோடி பின் னப்பட்டிருக்கிறது இந்த அழகான கதை.

மாரி காலத்தில் கடல் கொந்த ளிப்பும்.... கரையோர மக்களின் கஷ்ட மும் கண் முன்னே கொண்டுவர முயற் சித்திருப்பது சிறப்பு.

செல்லங்காக்கா மீன் பிடி தொழிலில் ஒரு படிக்காத மேதையாக சித்தரிக்கப்படுவது மிகவும் அழகு.

பேத்திக்காக சுடச்சுட பாலப் பம் வாங்கி வருவதும்.. விடிகாலையில் கடலோர மணலில் ஆமை முட்டை தோண்டி எடுத்து வந்து அவித்துக் கொடுப்பதும் உண்மையிலேயே ஆச் சரியம்..

ஆமை முட்டை கிழக்கு கரை யோர மக்கள் சாப்பிடுவதே எனக்கு இப்போதுதான் தெரியும். கடல் கொந்த ளிப்பில் வள்ளங்கள் அடித்து செல்லப் பட்டு விடும் என தன்னந்தனியே வள் ளங்களை காப்பாற்றப்போய் மயங்கி

கிடப்பதிலிருந்து ஆரம்பிக்கிறது இக்க தையின் விறுவிறுப்பு.

மகளின் வாழ்வில் ஏற்பட்ட துயர் பேத்தியை பாதிக்க கூடாது என் பதற்காக மகளுடன் சேர்ந்து பேத் தியை படிக்க வைக்க முயற்சிசெய்வ தும், இளைய மகனின் செயல் கண்டு உள்ளம் குமுறுவதும் கடலுக்கு சென்ற பொறுப்புணர்ச்சியான ஆண் மக்களில் மூத்தவன் வராமல் போகவே தாங்க முடியாது செல்லங்காக்காவின் உயிர் பிரிவதும் வாசிக்கும்போதே கண்ணோரம் கரித்துத்தான் போகின் றது .

மனம் திருந்திய மகன் தகப்ப னாரிடம் மன்னிப்பு கேட்க வந்த வேளை தகப்பனார் மரணித்து விட இளைய மகனின் மன்னிப்பு அங்கு செல்லாக் காசாகி விடுகின்றது பரிதா பமே..

ஒரு குடும்பத் தலைவனின் மர ணம் இங்கே மகனின் சுயநல போக்கி னால் குடும்ப பற்றற்ற செயலினால் ஏற்பட்ட விளைவாக உணர்த்தப்படு கின்றது.

உறவுமுறைகளுக்குள் உள்ள எதார்த்தம் அழகாக புரிய வைக்கப்பட் டிருக்கின்றது.

"தனி மரம் தோப்பாகாது" ஒரு குடும்ப அங்கத்தவர்களின் கூட்டு முயற்சியும் தியாகமும் தான் குடும் பத்தை உயர்த்தும் என்பதும் புரிகிறது.

உண்மையிலேயே கதையின் தொய்வில்லாத வேகத்திற்கு எழுத்தா ளரது விவேகம் கைகொடுத்திருக்கின் றது.

கதாசிரியர் கதை கூறும் லாவகம், உவமைகள் என்பன புதுமை யாகவும், அழகாகவும், நயமாகவும் இருக்கின்றன. இவருடைய எழுத்துக்க ளின் வீரியத்தின் மூலம் கதாசிரியர் தான் பிறந்த மண்ணுக்கு நிறை கௌர வம் தேடித் தந்திருக்கிறார்.

இயல்பிலேயே கவித்துவமாக பேசக்கூடிய நகைச்சுவையான கவிஞ ராக இவர் இருந்திருப்பார் போலும்... இந்தக் கதை நலிந்த மீனவக் குடும்பத் தலைவனின் கதையை மட்டும் சொல் லவில்லை. கரையோர வாழ் குடும்பங்க ளின் மொத்த சோகக் கதையும் இதில் புதைந்துள்ளதாகவே எனக்குத் தோன் றுகிறது.

துன்பத்தை கண்டு துவளாதே...
பகைவர்களை கண்டு பயப்படாதே..
துணிந்து அவர்களை நண்பர்களாக கருது...
ஆபத்தைக் கண்டு அஞ்சி ஓடாமல் அதனை அணைத்து வாழப்பழகு..

என்பதைப் போல எத்தனை எத்த னையோ கருத்துக்கள் நூல் நெடுகி லும் நிறைந்து காணப்படுகின்றது. இப் படியான ஒரு அழகிய நாவலை தந்த எழுத்தாளர் இந்த நாவல் வெளிவர முன்னரே மரணித்திருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

அவர் மறைந்தாலும் அவரது எழுத்துக்கள் மூலம் என்றுமே வாசகர் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பார்... வாழ்கின்றார். அன்னாரது சுவன வாழ் விற்காக அனைவரும் பிரார்த்திப்போம்.

# படித்ததில் பிடித்தது.

**பிடித்தது ஜெஸீமா முஜீப். மருதமுனை.**

எதிர்காலத்தில் மனிதன் இறக்காமல் இருப்பதற்கான தொழில்நுட்பங்கள் கண்டு பிடிக்கப்படுமா? இது பலரின் கேள்வி. என்னைப் பொறுத்தவரை மரணம் ஒரு வரம். மரணம் பெருங் கருணை. உண்மையில் மரணம் துன்பங்களில் இருந்து விடுதலை, நான் மரணத்தை எண்ணி என்றும் கலங்கியதே இல்லை அதை எந்த நேரத்திலும் வரவேற்க காத்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால் மரணம் தான் என்னைக் கண்டு பயப்படுகிறது.

சரி உங்களுக்காக ஒரு கதை இது, இந்த கதையை வாசித்தபின் முடிவிற்கு வாருங்கள் அலெக்சாண்டர் இந்தியாவுக்கு செல்லுமுன் இந்திய ஞானத்தைப் பற்றியும், ஞானிகளைப் பற்றியும் அதிசயங்களைப் பற்றியும் கேள்விப் பட்டிருந்தார். அதில் ஒன்று, வட இந்தியாவில் ஏதோ ஒரு குகையில் ஒரு சுனை இருப்பதாகவும், அந்த சுனை நீரை குடிப்பவர்கள் சாகாவரம் பெறுவர் என்பதுமாம்.

அலெக்சாண்டர் இந்தியாவிலிருந்து திரும்புவதற்கு முன் மிகுந்த பிரயத்தனத்திற்கு பின் அந்த குகையைக் கண்டுபிடித்தும் விட்டார். படைகளை பின்னே நிறுத்தி விட்டு அலெக்சாண்டர் மட்டும் முன்னேறி குகைக்குள் சென்றார். அது நீண்ட ஒரு குகை. குகையின் இறுதியில் சிறியதாக ஒரு சுனை இருப்பதைக் கண்டார். தண்ணீர் தெளிவாக சலனமற்று இருந்தது. அருகில் சென்றார். குனிந்தார். கவனமாக இரு கைகளையும் குவித்து தண்ணீரை அள்ளினார்.

என்ன ஒரு அற்புதம். இனிமேல் சாவில்லை. உலகம் முழுதும் செல்லலாம், உலகத்தை வெல்லலாம். மரணத்தை வென்றுவிட்டேன். அப்பொழுது ஒரு குரல் கேட்டது. தலையை நிமிர்த்திப் பார்த்தார். எதிர்க்கரையில் மிகவும் சோகமான தோற்றத்துடன் ஒரு காகம் அமர்ந்திருந்தது. அது பேசியது.

“ஒரு நிமிடம்.” அலெக்சாண்டருக்கு ஆச்சரியம். காகம் தொடர்ந்தது.

“ஒரு நிமிடம் அந்த நீரைப் பருகுவதற்கு முன் என் கதையைக் கேளுங்கள். நானும் உங்களைப் போல்தான்சில நூறு வருடங்களுக்கு முன் ஒரு நாள் மிகுந்த ஆசையுடன் இந்த நீரைப் பருகினேன். இந்த உலக சுகங்களை ஆசை தீர அனுபவித்தேன். இனி பார்க்க வேண்டியது எதுவும் இல்லை. அனுபவிக்க வேண்டியது எதுவுமில்லை. எல்லாம் அலுத்து விட்டது. என்னுடன் இருந்த உறவினர்களும் நண்பர்களும் இறந்து பல ஆண்டுகள் ஆகி விட்டது. எனக்கு என்று எவரும் இல்லை. எனக்கு வாழவும் பிடிக்கவில்லை. இந்த நீரைப்பருகி சாகா வரம் பெற்று விட்டதால் இறக்கவும் முடியவில்லை. வாழ்க்கை மிகவும் நரகமாகி விட்டது. இந்த நிலை யாருக்கும் வரக்கூடாது என்றுதான் நான் இங்கேயே அமர்ந்திருக்கிறேன். உன்னைப் போன்று யாராவது எப்பொழுதாவது வருவாராயின் அவர்களை எச்சரிக்கிறேன். இனி உன் விருப்பம்” என்று முடித்தது. அலெக்சாண்டருக்கு ஒரே குழப்பம். கண்களை மூடி சில நிமிடங்கள் யோசித்தான். இறுதியில் அந்தக் காகம் சொல்வதில் உள்ள நியாயம் புரிந்தது. மரணத்தின் தெளிவு பிறந்தது. உண்மையில் மரணம் என்பது கொண்டாடப்படவேண்டிய ஒன்று. மானுடப் பிறவியின் துன்பங்களில் இருந்து விடுதலை இறைவனின் அடியில் பேரானந்தம்.

# அழியாத நினைவலைகள்

அவ்ரியின்
சிறுகதை

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான் காத்தான்குடி.**



“ஹஸீமா பிள்ளைகள் ரெண்டையும் நான் பார்த்துக் கொள்கிறன்.... நீ இந்த கல்யாணத்த செய்துக்க ஓமெண்டு சொல்லுபுள்ள.... நல்ல மாப்பிள்ளை. அரசாங்க உத்தியோகம்... செய்யிறாராம்...” மாமி செய்னம்பு சொன்னதும் தான் தாமதம் ஹஸீமா பொங்கியெழுந்தாள்.

“எனக்கு இனி கல்யாணம் வாணாம் மாமி. அங்க மாப்பிள்ள இருக்கு. இங்க மாப்பிள்ள இருக் கெண்டு கல்யாணம் கொண்டு வரவும் வேணாம். மச்சான் ஊருக்கு உலகத்துக்கு தான் மௌத்தாப் போனாரு. ஆனா அவரு இப்பவும் உசிரோட இருக்கிறதாத் தான் நான் நெனைச் சுட்டு இருக்கன். அவர் என்ட உள்ளத்தில வாழ்ந்து கொண்டு இருக்கிறாரு மாமி” என்று ஹஸீமா முடிப்பதற்கிடையில்.

“இல்லம்மா எத்தனை நாளைக்கு ரெண்டு பிள்ளைகளயும் வெச்சுட்டு நீ தனியா இருக்கப்போற. நீ இளமையாக வேற இருக்கிறாய்... உனக்கும் ஒரு வாழ்க்கை துணை வேணும் புள்ள. இதெயெண்டாலும் முடிப்பம்” மாமி செய்னம்பு வற்புறுத்தினார்.

வேணாம் மாமி.. எனக்கு இனி கல்யாணம் வேணாம்.. “ஊடு வேணும்... ஊடு வேணும்... என்று மாஞ்சி மாஞ்சி எங்கள கலியாணம் முடிக்க உடாம எத்தனை வருசமா எங்கட கலியாணத்த தள்ளிப் போட்டிங்க மாமி.. இப்ப பாருங்க உங்க பிள்ளையும் மௌத்தாகிட்டாரு... நானும் விதவையாகிட்டன். எங்கட வாழ்க்கையும் முடிஞ்சு போச்சு. இருந்த ஊட்டிலயே எங்களுக்கு கல்யாணம் பண்ணி வெச்சிருந்தா ஏதோ கொஞ்ச காலமாவது நாங்க வாழ்ந்திருப்போமே... இப்போ இந்த வீடு இருக்கு.... ஆனா சேர்ந்து வாழ உங்கட மகன் இல்லையே... மாமி”

இப்போ... கல்யாணம் வேற கொண்டு வந்து என்ன கல்யாணம் முடி.. கல்யாணம் முடி என்று கரச்சல் படுத்துறீங்க.” கதையோடு கதையாக நாசுக்காக குத்திக் காட்டி தன் மன ஆதங்கங்களை மாமியாரிடம் அள்ளிக் கொட்டி விட்டாள் ஹஸீமா.

செய்னம்பு எதுவுமே பேச முடியாமல் தலை குனிந்து நின்றாள். ஹஸீமாவின் வார்த்தைகளில் ஏதோவொரு விதத்தில் நியாயம் தெரிந்தது. உண்மைதான் வரட்டுக் கௌரவத்துக்காகவும், போலிப் பகட்டுக்காகவும் தன் மகனுக்கு நல்லதொரு வீடு வாங்ககி கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தார் ஹஸீமாவின் மாமாயார் செய்னம்பு. ஆனால் தன் மகன் இத்தனை சுறுக்காய் போய் சேர்ந்து விடுவான் என்று செய்னம்பு கனவிலும் நினைக்கவில்லை. அது ஹஸீமாவின் உள்ளத்தில் இத்தனை ரணமாக இருக்கும் என்பதை அவர் எண்ணியும் பார்க்க வில்லை.

ஹஸீமா ஒரு சராசரிக் குடும்பத்தின் கடைசி வாரிசு. “ஏழ்மையாகப் பிறந்தாலும் இளமையாகப் பிறந்து விடக் கூடாது” என்பார்கள். எல்லோரும் திருமணமான பின் இவள் தனித்து விடப்



☞ 46

பட்டாள். அவரவர் குடும்ப பொறுப்பை அவரவர் கவனித்ததன் பின்னர் தான் வாப்பாவுடன் சேர்ந்து இந்த வீட்டைக் கட்டுவதற்கு மூத்த நானா அமீர் முன் வந்தும் அதனைக் கட்டி முடிக்க பல வருடங்கள் கடந்து போய் இருந்தன.

இருக்கும் இடத்தில் திருமணத்தை முடித்துவிட்டு பிறகு ஒரு வீடு கட்டி தரு கின்றோம் என்று அவளது உம்மாவும் வாப்பாவும் எவ்வளவு சொல்லியும் மாமி செய்னம்பு வீடு வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்றிருந்தா. எனவே கொஞ்சம் கொஞ்சமாக வீட்டைக் கட்டி முடிக்க பல வருடங்கள் கடந்து சென் றது. அதனால் கல்யாணம் முடிக்கவும் கால தாமதமும் ஆனது.

ஹஸீமா திருமணம் முடிந்து ஐந்து வருடங்கள் தான் சந்தோஷமாக வாழ்ந் தாள். ஒரே ஒரு ஆணும் ஒரு பெண் ணும் வாரிசாகக் கொடுத்து விட்டு அவ ருடைய கணவன் முனவ்வர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மரணித்துப் போய் ஆறு வருடங்கள் கடந்து விட்டி ருந்தது.

காலங் கடந்து திருமணம் செய்தும் சந் தோஷமாக வாழ்வதற்கு காலம் அங்கீ காரம் அளிக்கவில்லை. மரணம் மிக விரைவில் அவள் கணவரை அழைத் துக் கொண்டது. எல்லாம் விதிப்படி நடைபெறும் என்று தன் மனதை தேற் றிக் கொண்டாள். பொறுமை கொண் டாள் ஹஸீமா.

கணவன் முனவ்வர் தன் இரண்டாவது சகோதரனின் ஆத்ம நண்பன். தனது நட்பினை நீடித்துக் கொள்வதற் காகவும். தன் நண்பனின் சகோதரிக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டும் என்றும் விரும்பி தானே முன்வந்து காதல் திரு மணம் செய்து கொண்டான்.

கல்யாணம் முடித்து இரண்டு வாரிசு கள் அடுக்கடுக்காக வந்து பிறந்தன. ஆசை மனைவியோடும் அழகிய குழந் தைகளோடும் வாழும் பாக்கியம் தான் தன் கணவன் முனவ்வருக்கு கிட்ட வில்லை. ஹஸீமாவின் முகத்தை அண்ணாந்து பார்க்கும் போதெல்லாம் செய்னம்புவின் உள்ளத்தில் எதோ குற் றவுணர்வு எட்டிப்பார்க்கும். அதனை நிவர்த்தி செய்யும் நோக்கிலோ என் னவோ தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் ஹஸீமாவையும் பிள்ளைகளை யும் ஓடியோடி வந்து பார்த்துக் கொள் ளுவார் மாமி செய்னம்பு. தேவையான வற்றை யெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பார். ஆனால் ஹஸீமா வின் சந்தோசத்தை மட்டும் அவவால் மீட்டுக் கொடுக்க முடியவில்லை.

தன்னுடைய மாமியார் தன் பெற்ற தாயை விடவும் தன்னில் அதீத அன் பும் அக்கறையும் கொண்டிருப் பதை எண்ணி பெருமிதம் அடைந்து கொள் வாள் ஹஸீமா. மாமிக்கும் மருமக ளுக்கும் இடையில் ஆத்மார்த்தமான நேசம் நிலைத்திருந்தது.

இந்த ஆறு வருடங்களுக்குள் மாமி ஆயிரம் கல்யாணம் கொண்டு வந்தி ருப்பா. அவை எல்லாவற்றையும் தட் டிக் கழித்து வந்திருந்தாள். இனியும் கூட அவள் இன்னொரு வாழ்வை எண் ணியும் பார்க்கப் போவதில்லை. அத னால் தான் தீர்மானமாக இன்று மாமியி டம் சொல்லி விட்டாள். செய்னம்பும் செய்வதறியாது செயலற்றுப் போய் நின்றாள்.

ஹஸீமாவின் காதல் கணவன் மரணித் துப் போனாலும் அந்த மாறாத காதல் மரணித்துப் போகாமல் அவள் உள் ளத்தில் உயிரோடு இருப்பது அவ ளைத் தவிர யாருக்கு தெரியப்போகி றது.?

# தெரிந்து கொள்ளுங்கள்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது மருமகன் ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள்.

அலியே! ஐந்து விசயத்தை தினமும் செய்யாமல் உறங்க வேண்டாம்.

1. முழு குர்ஆனை ஓதாமல் உறங்காதே.

2. தினமும் 4000 தீனார்கள் தர்மம் செய்யாமல் உறங்காதே.

3. க.்.பதுல்லாஹ்வை தவாபு செய்யாமல் உறங்காதே.

4. சுவர்க்கத்தில் உனது இடத்தை பாதுகாக்காமல் உறங்காதே.

5. உனது எதிரியைக் (இச்சை) கொல்லாமல் உறங்காதே.

அதற்கு ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு
,
"நாயகமே! அனைத்தும் ஒரு இரவில் எப்படி சாத்தியம்" என கேட்க..

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

1. குல்ஹுவல்லாஹு சூராவை 3 முறை ஓதினால் குர்ஆன் முழுவதும் ஓதிய நன்மை பெறுவீர்.

2. சூரத்துல் பாத்திஹாவை 4 முறை ஓதினால் 4000 தீனார்கள் தர்மம் செய்த நன்மை பெறுவீர்.

3. நான்காம் கலிமாவை 10 முறை ஓதினால் க.்.பாவை தவாபு செய்த நன்மை பெறுவீர்.

4. லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் என்று 10 முறை ஓதினால் சுவனத்தில் உமது இடத்தை பாதுகாத்த நன்மையை பெறுவீர்.

5. அஸ்தக்பிருல்லாஹில் அளீம் வ அதூபு இலைஹி என 10 முறை ஓதினால் உமது எதிரியை கொன்றதற்கு சமம் என கூறினார்கள்.

இன்ஷா அல்லாஹ் நாமும் ஓதி மற்ற மற்றவர்களுக்கு நன்மை பெற செய்வோம்.

சோவியத் கதை

# ஒரு படைவீரனின் கடமை

அவியின் மொழிபெயர்ப்பு சிறுகதை

பி. ரயேவ்ஸ்கி

ஏற்கனவே ராணுவ மருத்துவ மனையில் இடம் போதவில்லை. அப்படி இருக்கும்போது காயமடைந்த மற்றொரு படைவீரன் அங்கு கொண்டு வரப்பட்டான். அவனை ஒரு ஸ்ட்ரெட்சரில் கொண்டுவந்து, முகப்பு மண்டபத்தில் கிடத்தினார்கள்.

தோள்கள், கைகள், கழுத்து, தலை என்று அவன் உடல் முழுவதும் கட்டு போடப்பட்டிருந்தது. அவன் இளைஞனா, வயதானவனா, கறுப்பு நிறமுடையவனா, சிவப்பு நிறமுடையவனா என்று கூறமுடியவில்லை. பல அடுக்குகள் கொண்ட அழுக்கடைந்த கட்டுகளில் ஓரிடத்தில் முக்கோண வடிவத்தில் வெட்டி விடப்பட்ட துவாரம் இருந்தது. அந்த முக்கோண வடிவ துவாரத்துக்குக் கீழே, அடியாழத்தில் வீங்கிக் களைத்துப் போன கண்கள் அலை பாய்ந்து கொண்டிருந்தன. அவனது கறுத்துப்போன உதடுகள் இலேசாக கரித்தன.

அவன் உணர்வு இழந்தவனாகக் காணப்பட்டான்.

“ரொம்பவும் சிரமப்பட்டு விட்டான்போலிருக்கிறது. ஏதோ காரணத்தால் அவன் மனம் உடைந்துபோயிருக்கிறான்” என்று இடது புற படுக்கையிலிருந்த ஒரு நடுத்தர வயதுடைய, சாப்பர் படைவீரன் கூறி பெருமூச்சு விட்டான்.

அச்சமயம் அங்கு டாக்டர் வந்தார். அவனுக்கு ஏற்பட்டுள்ள காய விவரங்களைப் படித்துப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்தார். இந்த ஆள் எப்படி இன்னும் உயிருடனிருக்கிறார்? அற்புதம்தான்!

ஏறக்குறைய ஒருமணிநேரம் கழிந்தது. காயமடைந்த போர் வீரன் அமைதி அடைந்தான். அவனது நெஞ்சிலிருந்து வெளிப்பட்ட கரகரப்பான, உள்ளடங்கிய முணுமுணுப்பு ஒலிதான் அவன் உயிரோடிருக்கிறான் என்பதைக் காட்டிற்று. சட்டென்று அவனுக்கு உணர்வு திரும்பியதுபோல் தோன்றிற்று. அவன் நிலைகொள்ளாது தவிக்கத் தொடங்கினான். கட்டுகள் போடப்பட்டு ஒரு கனத்த தடிபோல் இருந்த தனது. வலது கையைக் கட்டில் கால் பக்கம் நீட்டினான்.

“டாப்-டாப்- டாப்- டாப்- டாப் டாப் டாப்- டாப் டாப்-டாப்.”

ஒரு தெளிவான ஆனால் அடங்கிய தட்டும் ஒலி மௌனத்தைக் கிழித்துக்கொண்டு கேட்டது. அவனுக்கு அருகில் படுத்திருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. குண்டு வீச்சால் அதிர்ச்சி ஏதேனும் அடைந்துவிட்டானா? பிறகு தான் அவன் தனது கையில் ஒரு பெரிய கருப்புப் பொத்தானைப் பிடித்துக்கொண்டு கட்டில்கா

லில் தட்டுவதைப் பார்த்தனர். காயம டைந்தவர்கள் எரிச்சல் அடைந்தனர். சாப்பர் இரைந்து நர்சை அழைத்தான். அவள் புதிய மனிதனிடம் வந்து கட் டில் காலில் இருந்த அவனது கையை எடுத்துப் படுக்கையில் வைத்தாள்.

சுமார் கால்மணி நேரம் சென் றது. மீண்டும் மௌனத்தைக் குலைத் துக் கொண்டு மரங்கொத்திப் பறவை கொத்துவது போன்ற ஒலி கேட்டது.

"டாப்-டாப் டாப்.. டாப்" பெரு மூச்சுகளும், முனகல்களும், வேதனை ஒலிகளும் நிறைந்து முடிவற்றது போல் தோன்றிய அந்த ஆஸ்பத்திரி இரவில் நர்ஸ் அந்த வெறிகொண்ட கையை பன்முறைகட்டில்காலிலிருந்து எடுத்துப் படுக்கையில் வைத்தாள். ஆனால் அந் தக்கை விடாப்பிடியாக பிடிவாதமாக தொடர்ந்து தட்டிக் கொண்டிருந்தது.

"டாப்- டாப் டாப் டாப்- டாப்"

உருக்குலைந்து ஜீவனற்றுப் போன அந்த உடலில் இனியும் பலம் ஏதும் இருக்கும் என்று தோன்ற வில்லை. அவன் இங்கு வந்தலிருந்து ஒரு கவளம் உணவு கூட சாப்பிட வில்லை. வாய் திறந்து ஒரு வார்த்தை யும் பேசவில்லை. அவன் கைமட்டும் தான் அதற்குமட்டும் ஏதோ உயிர் இருப்பதுபோல் தென்பட்டது. மறுநாள் காலை ஒரு சார்ஜெண்ட் மருத்துவம னைக்கு வந்தார். சாப்பரின் கட்டிலுக் குப் பக்கத்தில் அமர்ந்தார்.

"டாப்-டாப்-டாப் டாப்டாப் டாப்"

இம்முறை தட்டும் ஒலி மிகவும் பலவீனமாக இருந்தது. முந்தின நாள் இரவு நர்ஸ் அவனிடமிருந்த பொத் தானை எடுத்துக் கொண்டு விட்டாள். எனவே இப்பொழுது அவன் தனது கைமுட்டியால் தட்டிக்கொண்டி ருந்தான். இப்படித்தான் திரும்பத் திரும்ப செய்கிறான். இரவிலும் கூட தட்டுவதை நிறுத்துவதில்லை என்று சாப்பர் சார்ஜெண்ட் பக்கம் திரும்பி எரிச்சலோடு கூறினான். சார்ஜெண்ட் கவனமாக உற்றுக்கேட்டார். டாப்-டாப்- டாப் டாப் சட்டென்று அவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. ஆமாம் அப் படித்தான் இருக்கவேண்டும். ஒரு குறி யீட்டுச் செய்தி அவர் மெல்ல முணு முணுத்தார். பிறகு செய்தியை உரக்க ஒவ்வொரு சொல்லாய் தெளிவாக உச் சரித்தார்.

மூன்று! மூன்று. இது ஏழு. வெடிமருந்துகள் தீர்ந்து வருகின்றன. உடனே வெடி குண்டுகள் அனுப்புங் கள். உடனே வெடி குண்டுகள் அனுப் புங்கள். இது ஏழு, நான் சொல்வது தெரிகிறதா. நான் சொல்வது தெரிகி றதா?

தாழ்வாரத்தில் அமைதி நில விற்று. ஆக, இதுதான் அவனது மனத்தை அலக்கழித்துக்கொண்டிருந் தது போலும்! வெடிகுண்டுகள்! அவனு டைய தோழர்களிடம் போதிய வெடி குண்டுகள் இல்லை

காயமடைந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். சாப்பர் ஒரு நீண்ட துயரப் பெருமூச்சு விட்டு சுவர்ப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

இச்சமயம் சார்ஜெண்ட் சட் டென்று எழுந்து ஜன்னல் பக்கமாக விரைந்தார். அங்கிருந்த சிகரெட் பற்ற

வைக்கும் கருவியை எடுத்து மேஜை மீது தட்ட ஆரம்பித்தார்.

"டாப்- டாப். டாப் டாப்.."

"ஏழு! ஏழு!" என்று அவர் மார்ஸ் குறியீட்டு முறையில் கூறினார்.

"செய்தி கிடைத்தது, வெடி குண்டுகள் அனுப்பி வைக்கிறோம். உடனே வெடி குண்டுகள் அனுப்பி வைக்கிறோம்." பிறகு சௌஜன்யமான முறையில் சொன்னார்.

"எல்லாம் நல்லபடியாக இருக் கிறது, தம்பி" கட்டுகள் போடப்பட்டி ருந்த புதிய மனிதனின் உடல் திடீ ரென்று குலுங்கிற்று. நர்ஸ் ஓடிச் சென்று படுக்கையில் படுக்கவைத் தாள். படைவீரனின் கண்கள் இப்போது அமைதி அடைந்தன. அவனது உதடு கள் கரிக்கவில்லை. அவன் மனம் இப்போது பூரண நிம்மதி அடைந்தது.

அவ்வளவுதான் ஆம், அவ்வள வுதான். அவன் தனது கடமையை நிறைவேற்றிவிட்டான். இறுதி மூச்சு உள்ளவரை நிறை வேற்றிவிட்டான். இரண்டுமணிநேரத்திற்குப்பிறகு அவன் இந்த உலகில் இல்லை.

# படித்ததில் பிடித்தது.



உரிமை இல்லாத உறவும், உண்மை இல்லாத அன்பும்.., நேர்மை இல்லாத நட்பும், நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும்.. என்றும் நிரந்தரம் இல்லை!

வாழ்க்கையில் உயிருக்கு அடுத்தபடியாக.. ஒரு மனிதன் இன் னொருவருக்கு அளிக்கும் ஒப்பற்ற பரிசு.. நம்பிக்கை தான்!

வந்து விழுகிற எல்லாக் கற்களும் விழுந்த இடத்தில் மூழ்கிக் கிடக்க... தன் போக்கில் போய்க் கொண்டிருக்கிறது நதி.

செய்ய விரும்புவதை இப் போதே செய்யுங்கள். எதிர்காலம் என்பது யாருக்கும் உறுதியானது அல்ல.

வாழ்த்தியவர்களை விட, வீழ்த்தியவர்களே நாம் முன்னேற மிகப் பெரிய தூண்டுகோலாக இருந்திருக்கி றார்கள். ஏனெனில் வாழ்த்தியவர்கள் தூண்டியது தன்னம்பிக்கையை. வீழ்த்தியவர்கள் தூண்டியது நம் தன்மானத்தை.

புகழ்ச்சியில் வளர்பவருக்குத் தான் பிறர் துணை தேவை. முயற் சியில் வளர்பவருக்குத் தன்னம்பிக் கையே துணை.

உங்களை வீழ்த்தியவர் விழி பிதுங்கிப் பார்க்கும் வளர்ச்சியை எட் டுங்கள். உங்கள் முயற்சிக்கு வெற்றி யின் வாசல் திறந்தே இருக்கிறது.

நல்லவர்களுடன் பழகினால் ஏமாற்றாமல் இருக்க கற்றுக் கொள்ள லாம். கெட்டவர்களுடன் பழகினால் ஏமாறாமல் இருக்க கற்றுக் கொள்ளலாம். ஆகையினால் கடந்து போன சில கசப்பான நினைவுகளை சுமந்து கொண்டிருந்தால் மனசுக்கு ஓய்விருக்காது.

வாழ்க்கையில் துயரங்களைத் தாங்கிக் கொண்டுதான் உயரங்களை எட்டிப் பிடிக்க முடியும்.

எல்லையற்ற வானமே எனது எல்லை என்று வாழ்க்கைக் கூட்டைக் கட்ட வேண்டும்.

வாழ்க்கை ஒரு விசித்திரமான பரீட்சை அடுத்தவரைப் பார்த்து காப்பி அடிப்பதால்தான் பலர் தோல்வியடை கிறார்கள்.

மனிதர்கள் பேசுகின்ற வார்த் தையைப் பொறுத்துத் தான் வாழ்க்கை இருக்கிறது. ஆகையால் நல்லதைச் சிந்தியுங்கள் நல்லவர்களைச் சந்தியுங் கள் உயர்சிந்தனைகளை சிந்தைக் குள் செலுத்துங்கள் வாழ்க்கை வழப்படும்.

# எம்மவர் கைவண்ணங்கள்


















SRI LANKA PEN CLUB